காவலன் வருடசந்தா
இலங்கை, வெளிநாடுகள்
ரூபா 9-00
(தபாற்செலவு உட்பட)

# காவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
செய்தித்தாளாகப் பதிவுபெற்றது.

உண்மையான பிறர்சிநேகமானது கைகளை அகல விரிக்கின்றது. ஆயின், கண்களை இறுக மூடிக் கொள்கின்றது.
— சென் வின்சென்ற் டி போல்

94-ம் புத். | 1969-ம் ஆண்டு வைகாசி மாதம் 24-ந் திகதி சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 19-ம் இல.

# மாகாண சங்கமும் மறுமலர்ச்சி மாற்றமும்

### வருடத்தின் பெரும் விழா

இந்த வருடம் ஈழத்தில் வாழும் கிறிஸ்தவர்களுக்கு பரிசுத்த ஆவியின் திருவிழா கருத்தும் களிப்பும் நிறைந்த ஒரு பெரும் விழாவாகின்றது. இத்தினத்திலே கொட்டாஞ்சேனை புனித லூசியாவின் சதுக்கத்தில் ஈழத்தின் இறைமக்கள் களிப்புடன் கண்டு களிக்கும் ஒரு பெரிய விழா. எம் நாட்டவரில் முதல் கருதினால் மிக. வந். பெஞ்சமின் கூரே அவர்கள், ஆயர்கள், குருக்கள், சந்நியாச கன்னியாஸ்திரிகள், பொது நிலையினர் எல்லோரும் புடைசூழ தேசிய—சமய ஆடம்பரங்களுடன் இலங்கையின் இரண்டாவது மாகாண சங்கத்தை மூடிவைப்பார். (முதலாவது சங்கம் மிகவந். பொஞ்சீன் ஆண்டகையால் நடத்தப்பட்டது).

### ஆரவாரம், ஆயத்தம்

வத்திக்கான் சங்கத்திலே ஆரம்பிக்கப்பட்ட மறுமலர்ச்சி மாற்றங்கள் எம் மண்ணிலேயும் இடம்பெறவேண்டும் என்ற ஆர்வத்துடன் சில வருடங்களுக்கு முன்னதாக இம் மாகாண சங்கம் அறிவிக்கப்பட்டது. திருச்சங்க ஏடுகள் இலங்கையின் கலை, மொழி, கலாச்சார பண்பாடு இவைகளுக்கு ஏற்க வியாக்கியானம் செய்யப்படவேண்டும், என்ற விருப்பத்தினுல் பல ஆயத்தக் கூட்டங்களும், குழுக்களும் இரவு பகலாய் இயங்கி வந்தன. சில மேற்றிராசனங்களிலே ஆயத்தச் சங்கங்களும் (Diocesan Synods) நடைபெற்றன.

### திட்டங்கள், சட்டங்கள், திருத்தங்கள்

சென்றவருட பரிசுத்த ஆவியின் விழாவிலே ஆரம்பிக்கப்பட்ட மாகாண சங்கம் ஒன்பது திட்டங்களை அலசி ஆராய்ந்தது. மறை வல்லுனர், பொதுநிலை வல்லுனர் இப்படியாக திருச்சபையின் சகல வட்டாரங்களிலேயுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பரிசுத்த ஆவியின் உதவியுடன் ஆயத்தம் பண்ணப்பட்ட திட்டங்களுக்கு எத்தனையோ மாற்றங்களையும், திருத்தங்களையும் கொண்டுவந்தனர். திரும்பவும் அதே ஆண்டு ஆவணியில் சந்தித்து வேலையைத் தொடர்ந்து நடத்தினர். இந்த ஆண்டுத் தொடக்கத்திலேயும் இறுதி மாற்றங்கள் செய்யப்பட்டன. இவை எல்லாவற்றிற்கும் முடிவு கூறுவதற்காகச் சென்ற 17ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரையும் ஆயர்கள் அனைவரும் தேவத்தையில் உள்ள தேசிய பேராலயத்தில் செபத்திலும் தியானத்திலும் பரிசுத்த ஆவியுடன் இத் திட்டங்களைப்பற்றி ஆழ்ந்து ஆலோசிப்பதில் கழித்தனர். இலங்கையின் திருச்சபையைப் பொறுத்தமட்டில் மறுமலர்ச்சி எவ்விதம் முன்னேற வேண்டும் என்ற கேள்விக்கு கடவுளின் சித்தத்தை வேண்டினர். இவர்களுடன் இலங்கைத் திருச்சபை முழுவதும் ஆரவாரித்தது; செபித்தது, திட்டங்களையும் சட்டங்களையும் எதிர்பார்த்தது. இப்போ அவைகள் வெளிவந்துவிட்டன. நாம் இனி எதிர்பார்ப்பது என்ன?

### திட்டங்களை அமுல்செய்வனரா

இவ்வளவு ஆர்வத்துடன் ஆசித்த மறுமலர்ச்சி மாற்றங்கள் அழகான திட்டங்களில் நின்றுவிடுமா அல்லது நேர்மையான ஆர்வத்துடன் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலேயும் அமுல் செய்யப்படுமா? இந்தக் கேள்விக்கு விடையிறுப்பது எதிர்காலச் சம்பவங்கள். ஆனுல், இவ்விடையிலிருக்க வேண்டிய அம்சங்கள் சில தெளிவாயிருக்கின்றன.

* * *

தோற்றங்கள், அமைப்புகள் சடங்கு முறைகள், ஒழுங்கு முறைகள் இவைகளில் மாத்திரம் சில மாற்றங்களைச் செய்துவிட்டு திருச்சபை மறுமலர்ச்சி அடைகின்றது என்று நம்மைமைப் பாராட்டி ஏமாந்து போகக் கூடாது. உண்மையான மறுமலர்ச்சி எம்முடைய மனபோக்கின் மாற்றத்திலே ஆரம்பமாகின்றது. இறை மக்கள் அனைவரும் தங்களுடைய அபிப்பிராயத்தையும் மனப்போக்கையும்பெருமையும் பொறுமையின் றிதாழ்ச்சியுடனும் எளிமையுடனும் திருச்சபையின் விருப்பத்திற்கிணங்கி விட்டுக்கொடுக்க வேண்டும். இற்றைவரைக்கும் ஆர்வத்துடன் அரவணைத்த போக்குமுறைகள் சில கைவிடப்பட வேண்டுமென்று திருச்சபை வேண்டக்கூடும். இவ்வேண்டுதலுக்கு கிறிஸ்துவின் புகழ்ச்சிக்காக, மனமுவந்து செவிசாய்ப்பது மறுமலர்ச்சியின் நிபந்தனையாகும்.

* * *

ஒவ்வொரு மேற்றிராசனத்திலிருக்கும் இறைமக்களை உண்மையிலும், நேர்மையிலும் வழி நடத்த இறைவனுல் அனுப்பப்பட்டவர்கள் இருக்கிறுர்கள். அவர்கள்தான் அபிஷேகம் பெற்ற ஆயர்களும் குருக்களும். கடவுளினதும் முழுத் திருச்சபையினதும் விருப்பத்தை தம் மக்களுக்கு எடுத்துக் கூறுவது மாத்திரமல்ல, மக்கள் தம் முன்னேற்றத்திற்கு ஆவியினுல் உந்தப்பட்டுச் செய்யும் திட்டங்களைத் திருச்சபையின் மனப்பான்மைக்கு ஒத்தவாச் செய்வதும் அவர்களின் தலைமேற் சுமந்த கடனுகும்.

* * *

மாற்றங்கள் செய்யவேண்டிய வட்டாரங்கள் பல. திருச்சபையின் தெய்வீகத்தன்மையிலோ அதற்கு ஸ்தாபகரினுல் அருளப்பட்ட அமைப்பிலோ மாற்றம் செய்ய முனைவது வியர்த்தம். ஆனுல் திருச்சபை மேற்கு நாடுகளிலும், ஐரோப்பிய சூழ்நிலையிலும், மத்திய காலத்திலும் தன்னகத்தே சேர்த்திருந்த அமைப்புகள் சில எம் மத்தியிலும் வெளிநாட்டு மறைபோதகர் வழியாக இடம்பெற்றிருக்கின்றன. இவைகளை நீக்கி எம் சூழ்நிலைக்கு ஏற்ற மனுஷீக அமைப்புகளை உருவாக்கவேண்டும்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## மணமகளின் குருமகனுர் தாயாரின் மறுமணத்தை ஆசீர்வதித்தார்

அண்மையில் இங்கிலாந்துப் பகுதியிலுள்ள சறேமாகாணத்தில் ஒரு சந்தோஷகரமான திருமணம் நடைபெற்றது. அதில் விசேஷமானது யாதெனில்: மணமகளின் மகனுகிய குருவானவர் ஒருவரே திருமணத்தை ஆசீர்வதித்துத் திருப்பலி ஒப்புக்கொடுத்ததே: குருவானவர் வணக்கத்துக்குரிய சைமன் ஸரொக் என்னும் குருவானவர். தாயாரின் வயது 59. அவரது இரண்டாம் கணவன் திரு ஜோண் றுத்லெட்ஜ் என்பவருக்கு வயது 65,

## சுவாமி பியோவின் சகோதரியின் மறைவு

திருக்காயங்களைத் தன்மேல் கொண்டவரும், பல புதுமைகளை ஆற்றி அண்மையில் மறைந்தவருமான சுவாமி பியோ (Padre Pio) வினுடைய சகோதரி சிஸ்டர் பியா போர்ஜியோனே சென்றவாரம் தமது கப்புச்சீன் மடத்திலே காலம் சென்றுர். 1917ஆம் ஆண்டு சுவாமி பியோ தன் சகோதரியை ரோமையில் உள்ள மடத்தில் சேர்த்துவைத்தார். அன்று தொட்டு மரணம் வரையும் இதே மடத்திலேயே சகோதரி பியா தனது வாழ்க்கை முழுவதையும் செபத்தில் செலவழித்தார்.

## பரி. தந்தையின் ஜெனிவா விஜயம்

பரி. தந்தை 6-வது சின்னப்பபாப்பரசர் வருகிற மாதம் சுவிற்சலாந்துதேச ஜெனிவா நகரத்துக்கு விஜயம் செய்ய இருக்கிறுர். சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் தலைமைக் காரியாலயம் அந்நகரில் தொழிலாற்றுகின்றது. அக்காரியாலயம் அங்கு நிறுவப்பட்டு 50 வருட நிறைவு விழாவும் அங்கு நடைபெறும். அக்கொண்டாட்டத்தில் பங்குபெறப் பாப்பரசர் அண்மையில் அழைக்கப்பட்டுள்ளார். அவ் அழைப்பை ஏற்றுக் கொண்ட பரிசுத்த தந்தை ஜெனிவா நகரில் இருக்கும் தினங்களில் உலக கிறிஸ்தவ சபைகளின் தலைமைக் காரியாலயத்துக்கும் சென்று அச்சபையினருக்குத் தமது மரியாதையைத் தெரிவித்துக் கொள்ளுவார்.

## அர்ச்சியசிஷ்டர்களின் முறையில் பாப்பரசர் மாற்றங்கள் செய்தது ஏன்?

2ஆம் வத்திக்கான் சங்கத்திலே திருவழிபாட்டின் வருடாந்த அட்டவணையில் பல மாற்றங்கள் செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை சங்க பிதாக்கள் வற்புறுத்தியிருந்தனர்; சங்கத்தின்பின் இதுகருத்தை ஆராய்ந்து வந்த செயற்குழுவின் சிபார்சுகளைப் பரிசுத்த தந்தை நன்கு பரிசீலனை பண்ணினதன்பின்புதான் இம் மாற்றங்களைப் பிரகடனம் செய்தார். "இம் மாற்றங்களின் அவசியத்தை மக்கள் விளங்கிக்கொள்ள சிலகாலம் எடுக்கக்கூடும். அதுகாலவரையும் சிலர் ஓரளவு ஏமாற்றம் அடையலாம். ஆனுல் விரைவில் உண்மைநிலைமையை உணர்ந்து இம் மாற்றங்கள் திருச்சபையின் வளர்ச்சிக்கு உதவுவதை அறிந்து அவற்றை நல்மனதுடன் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்பது திண்ணம்" என இலங்கை "மெசெஞ்சர்" பத்திரிகையில் அக்குவைனஸ் சர்வகலாசாலை அதிபர் வண. ரிசா பாலசூரியா சுவாமியார் கூறியிருக்கிறுர்.

## சிறைச்சாலை வீடுகள் குறையும்

ஆங்கில நாட்டில் பிரபல்யம் பெற்றுவாழும் ஹானே பிரபு அன்று லண்டன்மாநகரில் வர்த்தகப் பெரியாரின் மகாநாட்டிலே அவர்கள் செய்யத்தகும் சமூகசேவையைப்பற்றிக் குறிப்பிடுகையில், அவர்களால் கூடியளவு புதிய வீடுகளை மக்களின் உபயோகத்துக்குக் கட்டி எழுப்பக்கேட்டுக் கொண்டார். "சிறைச்சாலைகள், திருத்தச்சாலைகள் கட்டி எழுப்புவதிலும், பொலிஸ் பட்டாளத்தைப் பெருக்குவதிலும் பணத்தைச் செலவு செய்யாது பல்லாயிரக்கணக்கான வீடுகளைக் கட்டி எழுப்பி இந்நகரிலே ஒழுக்கத்திருத்தத்தை அடைந்திருக்கிறேம்."

## வத்திக்கான் வீதிகளில் ஆடல்பாடல் அலங்காரங்கள்

இரு வாரங்களுக்கு முதல் பரிசுத்த பிதா 6-வது சின்னப்ப பாப்பரசர் 33 புதிய கருதினுல்மார்களுக்கு செந்தொப்பி அளித்து கூட்டுப் பூசை ஒப்புக்கொடுத்த தினத்திலே வத்திக்கான் வீதிகளில் காணப்பட்ட ஆடை அலங்காரங்களுள் ஸ்கொத்திலாந்திலிருந்து சென்ற சுமார் 500 திருயாத்திரிகர்களின் பரிமளிப்பு யாவர் மனதையும் கொள்ளை கொண்டன: ஸ்கொத்திலாந்து தனது இரண்டாவது கருதினுலைப் பெற்றுக் கொண்ட தினத்தை இவர்கள் வத்திக்கானிலேயே சிறப்பாகக் கொண்டாடினர். புதிய ஸ்கொத்திலாந்து கருதினுல் கிறே அடிகளார் தமது நாடு சென்றதும் ஒரு மகத்தான வரவேற்பு அவருக்கு அளிக்க சகல ஆயத்தங்களும் செய்யப்பட்டிருக்கின்றன.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்த்தராகிய யேசுக்கிறீஸ்துவின் விண்ணேற்றமும் தூயஆவியானவரின் வருகையும்

(பி. சவரிமுத்து)

உலக மீட்பராகிய யேசுக்கிறீஸ்துநாதரின் பாஸ்காத்திருநாளில் அவருடைய மரணம், உயிர்ப்பு, விண்ணேற்றம், பெந்தக்கோஸ்து ஆகிய நான்கு திருநாட்களும் நெருங்கிய தொடர்புடையன. இத்திருநாட்கள் விசுவாசிகளின் அவநம்பிக்கைக்கும், நம்பிக்கைக்கும், சஞ்சலத்துக்கும், சந்தோஷத்துக்கும், மனமுறிவுக்கும், மகிழ்ச்சிக்கும் இடமளிக்கும் சம்பவங்களாக இருக்கின்றன. யேசுநாதரின் இறப்பின் பின் அநேகர் அவருடைய வாழ்வு முடிந்தது என்று விசனப்பட்டுக் கொண்டு மெசியாவில் அவநம்பிக்கை கொண்டு வாழ்ந்தனர். வேறுசிலர் கன்னிமரியம்மாள் பத்தியுள்ள ஸ்திரிகள், அப்போஸ்தலர்கள் அவர்களுடைய சீடர் உட்பட "இறந்த போதிலும் எமது ஆண்டவர் மீளவும் உயிர்ப்பார்" என்ற நம்பிக்கையோடு இருந்தார்களென்று வாசிக்கிறோம். மீண்டும் யேசுநாதர் உயிர்த்தெழுந்தபோது அநேகர் அதை நம்பத் தயாராயிருக்கவில்லை. அவருடைய உண்மையுள்ள அப்போஸ்தலராகிய புனித தொம்மையப்பர் அதை நம்பச்சற்றும் தயாராயிருக்கவில்லை. ஆகையால் மற்றச் சீஷர்கள் கர்த்தரைக் கண்டோமென்று அவருக்குச் சொன்னபோது அவர் "நான் அவருடைய கரங்களிலே ஆணிகள் அறைந்த துவாரத்தையும் கண்டு, ஆணிகள் இருந்த இடங்களிலே என் விரலையும் விட்டு அவருடைய விலாவில் என்கையையும் இட்டாலொழிய விசுவசிக்கமாட்டேன்" என்று அவர்களுக்குச் சொன்னார். அதன்பின் சம்பவித்தது என்னவெனில் எட்டுநாட்களுக்குப்பின் மறுபடியும் யேசுநாதருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருக்கையில் தோமையாரும் அவர்களுடன் இருந்தார். அப்பொழுது கதவுகள் பூட்டியிருக்க யேசுநாதர்வந்து அவர்கள் நடுவில் நின்று "உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக" என்றார். பின்னும் அவர் தோமையாரை நோக்கி "நீ இங்கே உன் விரலை இடு. என் கரங்களைப் பார். உன் கையை நீட்டி என் விலாவில் வை. அவிசுவாசியாய் இராமல் விசுவாசியாய் இரு" என்று திருவுளம் பற்றினர். தோமையாரும் அவருக்கு மறுமொழியாக "என் ஆண்டவரே! என் தேவனே! என்றார். யேசுநாதரோ அவரை நோக்கி "தோமாஸ்! நீ என்னைக் கண்டதினாலல்லவோ விசுவசித்தாய். காணாதிருந்தும் விசுவசித்தவர்கள் பாக்கியவான்கள்" என்றார்.

யேசுநாதருடைய உயிர்ப்பின் பின் தமது விண்ணேற்றத்தைப் பற்றித் தமது சீடர்களுக்கு இடையிடையே மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் குறிப்பிட்டார். அவர் அவர்களைப் பார்த்து 'இன்னும் கொஞ்சக் காலம் அதன் பின் என்னைக் காணமாட்டீர்கள். மீண்டும் கொஞ்சக் காலம் அதன்பின் என்னைக் காண்பீர்கள். ஏனெனில் நான் என் பிதாவினிடத்துக்குப் போகிறேன்" என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்ட அப்போஸ்தலர்களும் சீடர்கள் பலரும் புலம்பி அழுதார்களென்று வாசிக்கிறோம். ஏனெனில் இவ்வார்த்தைகள் மூலம் தமது விண்ணேற்றத்தை வெளியுலகுக்கு வெளிப்படுத்தினர். அவருடைய உயிர்ப்பைப் பற்றி உண்மையான விசுவாசம் எவ்வாறு மிகச் சொற்பப் பேரிடம் இருந்ததோ அதுபோலவே அவருடைய விண்ணேற்றத்தைப் பற்றியும் மிகச்சிலரே நம்பிக்கையுடையவர்களாய்க் காணப்பட்டனர். இந்நிலையைக் கண்ணுற்ற யேசுநாதர் தம்முடைய சீஷர்களைப் பார்த்து "இப்போது என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன். ஆயினும் எங்கே போகிறீரென்று உங்களில் ஒருவனாகிலும் என்னைக் கேட்கவில்லை. நான் இவைகளை உங்களுக்கு அறிவித்ததினாலோ உங்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது.



அப்படியானாலும் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்கு நலமாயிருக்கிறது. ஏனெனில் நான் போகாதிருந்தால் தேற்றுகிறவர் உங்களிடத்தில் வரார். நான் போவேனாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்." மேலும் அவர் தொடர்ந்து அவர்களுக்குக் கூறியதாவது "சத்திய இஸ்பிரீத்துவாகிய அவர் வரும்போது சகலசத்தியத்தையும் உங்களுக்குப் படிப்பிப்பார்."

இவ்வார்த்தைகள் மூலம் தூயஆவியானவர் அப்போஸ்தலர்மேல் இறங்கிவரும் சம்பவத்தைச் சுட்டிக்காட்டினார். இவ்வாறு தமது உயிர்ப்பின் பின் நாற்பது நாட்களாகத் தமது அன்னை, அப்போஸ்தலர்கள், அன்பான சீடர்களுக்குத் தரிசனையளித்து தமது உயிர்ப்பை அவர்களுக்கு நன்கு ருசுப்படுத்தினார்.

தமது உயிர்ப்பின் பின் நாற்பதாம் நாளன்று அவர்கள் பார்த்துக்கொண்டிருக்க அவர் உயர எழுந்தருளினார். அப்போது ஓர் மேகம் வந்து அவர்களுடைய கண்களுக்கு அவரை மறைத்தது. அவர் விண்ணுக்கு எழுந்தருளிப் போவதை அவர்கள் உற்றுப்பார்த்துக் கொண்டிருக்கையில் இதோ வெள்ளையுடை அணிந்தவர்களாகிய இரண்டுபேர் அவர்கள் அருகேவந்து நின்று அவர்களை நோக்கி, "கலிலேய மனிதரே! நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டு நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த யேசுநாதர் எப்படிப் பரலோகத்துக்கு எழுந்தருளிப் போகக் கண்டீர்களோ அப்படியே திரும்பவும் வருவார்" என்றார்கள்.

உண்மையாகவே யேசுநாதர் எக்காளத்தொனியோடு எழுந்தருளினார். ஆனால் தேவனுடைய விண்ணேற்றத்தின் பின் மட்டற்ற திகிலடைந்த அப்போஸ்தலர் சீஷர்கள் யாபேரும் ஒரு வாரமாக ஒரே இடத்தில் கூடியிருந்தார்கள்.

யேசுநாதர் கூறிய வார்த்தைகள் உண்மையா? தூய ஆவியானவர் தங்கள்மேல் இறங்கிவருவாரா? என்றெல்லாம் நினைத்து ஒரு கணம் நம்பிக்கையும் மறுகணம் அவநம்பிக்கையும் பீடித்தவர்களாய்ப் பன்னிரண்டு நாட்கள் இருந்தார்கள்.

அப்பொழுது சம்பவித்ததாவது பலத்த காற்றடித்துக்கொண்டு வருவதுபோலத் திடீரென வானத்தினின்று ஒரு சத்தமுண்டாகி அவர்கள் உட்கார்ந்திருந்த வீடுமுழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிபோன்ற பிரிந்த நாவுகள் அவர்களுக்குத் தோன்றி அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்துதங்கின. உண்மையாகவே அந்நேரத்தில்தான் தூயஆவியானவர் அவர்கள்மேல் இறங்கி வந்தார். இதன் காரணமாக அவர்கள் எல்லோரும் இஸ்பிரீத்து சாந்துவினால் நிரப்பப்பட்டார்கள். அவர்கள் அச்சம் ஓர்மமாக மாறிற்று. அவர்களுடைய மௌனம் பேரிரைச்சலாயிற்று. உடனேயே அவர் பேசக் கொடுத்தபடியே அவர்கள் பற்பல பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள்.

G. C. E. (Ordinary Level)

# கிறிஸ்தவம்

க. பொ. த. பத்திரப் பரீட்சைக்குரியது (மார்கழி 1969)

(தமிழாக்கம்: சிஸ். அன்ரனி யோசவ்)

## புனித லூக்காஸ் சுவிசேஷம்

### வினா: புனித லூக்காஸ் சுவிசேஷத்தின் இலக்கும், நோக்கமும் என்ன?

(சென்ற வாரத் தொடர்ச்சி)

மோயீசனதும், இறைவாக்கினரதும் சட்டங்களுக்கு மக்கள் செவிசாய்க்க வேண்டுமென்றும் (16:27) ஆபிரகாமின் சந்ததிக்கு விசேஷ ஆசீர்வாதங்கள் உண்டென்றும கூறுகின்றார் (13:16, 19:9) யூத சாதியினர்களுள் இருந்த பல்வேறு பகுதியினரை இவர் மாத்திரம் குறிப்பிடுகின்றார்.

மேற் கூறியவற்றிலிருந்து இவர் பிற சாதியாருக்கும், யூத மதத்திலிருந்து மனந்திரும்பியவர்களுக்கும் தமது சுவிசேஷத்தை எழுதினார் என்பது தெளிவு றோம் நகரின் புனித இராயப்பரால் மனந்திருப்பப்பட்ட பிற சாதியினருக்கு மாற்கு தமது சுவிசேஷத்தை எழுதியதுபோல், கிரேக்க உலகிலிருந்த, புனித பவுல் மனந்திரும்பிய அஞ்ஞானிகளுக்கு லூக்காஸ தமது சுவிசேஷத்தை எழுதினார்.

மேலும் அவரது சுவிசேஷம் கிறீஸ்தவர்களுக்கே எழுதப்பட்டதென்பது (1:4) அறியக்கிடக்கின்றது.

இன்னும் இவரது சுவிசேஷத்தின் முதன் நான்கு வசனங்களிலிருந்து இவருக்கு இன்னும் இரு நோக்கங்களிருக்கின்றன என்பது தெளிவாகின்றது.

1. தனக்குமுன் சுவிசேஷத்தை எழுதியவர்களிலும்பார்க்க கிறீஸ்துவின் சரிதையை பூரணமான முறையில் எழுதுவது (1:3).

2. செவிவழியாக ஏற்கனவே கேட்ட சத்தியங்களை விளக்குவதும் (அத்தியாயம் 4:) இவரது நோக்கங்களில் ஒன்று எனக் கொள்ளலாம்.

சுருக்கக் கூறின கிறீஸ்துவின் வரலாற்றை முறைப்படி தொடர்புபடுத்திக்கூறும் வரலாற்று ஆசிரியராக இருப்பதோடு, கிறீஸ்து பரலோகத்திலிருந்துவந்த இறைமகன்; மானிடரின் இரட்சகர்; என்று நிரூபிக்கும் சமயவாதி (Apologist) யாகவும் காணப்படுகின்றார்.

**சுருக்கம்:** லூக்காஸ் சுவிசேஷத்தின் நோக்கம்:

என்ன நோக்கத்தைக் கொண்டு புனித லூக்காஸ் தனது சுவிசேஷத்தை எழுதினரென்று அத்தாட்சியுடன் விளக்குக?

அ. மற்ற மூன்று சுவிசேஷகர்களைப்போல் புனித லூக்காவும், வாய்மொழியால் போதிக்கப்பட்டவற்றிற்கு எழுத்துமூலம் அத்தாட்சி கொடுப்பதைத்தான் தமது பொது நோக்கமாகக் கொண்டுள்ளார் என்று அவருடைய முகவுரையில் இருந்து அறிகிறோம் "உனக்குப் போதிக்கப்பட்டவைகளின் உண்மையை நீ அறிந்து கொள்ளவேண்டும் என்பதைப்பற்றித்தான்" (லூக். 1:4).

ஆ. அவருடைய விசேஷ நோக்கம் யாதெனில் யூதர் அல்லாத பிற சாதியாருக்கும் யேசுநாதருடைய இரட்சணியத்தைப்பற்றி அறிக்கையிடுவதாம். ஆகையால்தான் அவர்...

1. எபிரேய பெயர்களுக்குப் பதிலாக, கிரேக்க பெயர்களை உபயோகிக்கிறார் (23:33).
2. பலஸ்தீனா தேசத்தின் பட்டணங்கள் இருக்கும் இடங்களை விபரமாகக் கூறுகிறார். (4:31) (8:26) (24:13).
3. யூத வழமைகளை விளக்கமாகக் கூறுகிறார் (2:21), (2:42), (22:1).
4. யேசுவின் வம்சவரிசையை ஆதாம் வரையும் கூறி மனுக்குலம் முழுவதையும் கிறிஸ்து இரட்சிக்க வந்தார் என்று காட்டுகிறார். மத்தேயு சுவிசேஷத்தில் கூறப்படுவதுபோல பழைய ஏற்பாட்டு வசனங்களை லூக்காஸ் அதிகம் கையாளுவதில்லை.
5. அஞ்ஞானி என்ற சொல்லுக்குப் பதிலாகப் பாவி என்ற சொல்லை உபயோகிக்கிறார் (6:32) (12:30) நமது ஆண்டவரின் பிறப்பும், ஸ்நாபக அருளப்பரின் தொண்டும் உரோமைச் சக்கரவர்த்திகளான அகஸ்தஸ் சீசர், தைபிரியசிஸ் என்பரின் ஆட்சிக்காலத்தோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளன.
6. இரட்சணியம் சகல மனிதர்களுக்கும் உரியது என்று கூறுகிறார் (2:10) (2:32) (3:6).
7. யூதர் அல்லாதவர்களைப் புகழ்கிற சம்பவங்களைக் குறிப்பிடுகிறார்.
   (1) பத்து குஷ்டரோகிகள் குணமாக்கப்பட்டது.
   (2) நல்ல சமாரித்தன்
   (3) ஊதாரிப்பிள்ளையின் உவமை
   (4) சீரியா நாட்டு நாமான்
   (5) சப்பாதாவின் விதவை

இ. தமது மூன்றும் நோக்கமாக யேசுக்கிறீஸ்து இரக்கமும் தயாளமும் உள்ள இரட்சகர் என்று காண்பிக்க எத்தனிக்கிறார்.

1. பாவிகள், தள்ளப்பட்டவர்கள் மேல் கிறிஸ்து இரக்கம் காண்பித்ததைக் கூறுகிறார் (13:1, 15:1, 8:11, 18:9, 7:36) சக்கேயுவின் வீட்டில் போசனம் அருந்தியது; நல்ல கள்ளனுக்கு இரட்சணியம் கொடுத்தது.
2. எளியவர்கள் நோயாளிகள்மேல் தயவு உள்ளவர் எனக் காட்டுகிறார் (4:21, 16:19, 7:2, 8:16).
3. சிறுவர்கள்மேல் பட்சமுள்ளவர் எனக் காட்டுகிறார். சிறியவனுக்கு இடறலாயிருக்கப்படாது (17:2). சிறுவரை வரவழைத்தது (18:16).
4. பெண்கள்மேல் கரிசனை உள்ளவர் எனக் காட்டுகிறார் (7:2, 8:2, 10:38, 18:2, 23:27, 7:37, 13:2).

மேற்கூறிய சம்பவங்கள் அவரது சுவிசேஷத்துக்குரிய தனிப்பண்புகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமலன் காட்டிய வழி

— நீ. மரிய சேவியர் —

(சென்றவாரத் தொடர்ச்சி)

**த. மடம் :**

ஒன்று கேட்கலாமா ?......

**சமாரி :**

தாராளமாக !......

**த. ம.**

இவ்வளவு தூரம் நீர் இவனில் அக்கறை காட்டுகிறீரே ! முன்பின் தெரியாதவனுக்கு......

**சமாரி :**

முன்னுக்கு இருப்பவர் கடவுள். நம் எல்லோருக்கும் தந்தை அவர்தானே ! பின்னே நிற்பவன் எனது சகோதரன். "யாதும் ஊரே — யாவரும் கேளீர்." உரிமையில் நான்கு திசையும் உறவினின் சோதரமுறையும் இதுதான் தர்மநெறி — அறவழி — அன்புவழி — இதை உணர்பவன்தான் மனித தெய்வம்.

பாடல்

**அருள்சேர் அன்பிற்கு நிகரேது— அரிய**
**அமலநற் பண்பிற்கு இணையேது**
**உலகோரே உண்மை உணர்வீரே — அன்பே**
**உயிர்களில் விளங்கும் தெய்வீகம்**
**புவி இருந்துமென கவி திகழ்ந்துமென**
**கடைசிப் பலனும் மறைவேயாம்**
**நிலை சிறந்து வளர்நெறி உயர்ந்து கதி**
**அடையும் வண்ணம் அன்பேதான்**
**யேசு உரைத்து வழிகாட்ட நீர் வாழவேண்டும்**
**நிறை அன்பேதான் — இறை அன்பேதான்.**

**ஒருவன் :**

என்ன அருமையான விளக்கம். யார் அயலவன் என்ற கேள்விக்கு நாம் எவ்வாறு அயலவனை அன்புசெய்ய வேண்டுமென்றே சொல்லிவிட்டாரே.

**மற்றவன் :**

முன்பின் தெரியாதவனை — ஊர்பேர் அறியாதவனைச் சகோதரன் எனக்கணித்து உதவி செய்தானே !......

**ஒருவன் :**

படைக்கப்பட்ட பொருட்களிலே அன்புசெய்யப் படுவதற்கு அருகதை இல்லாதிருந்தும், அன்புசொரியும் ஆண்டவன் போல......

**மற்றவன் :**

தானாக — அதை உணர்ந்து — உடனடியாக உதவி செய்தானே — அஃதல்லவா அன்பின் செயல்.

**ஒருவன் :**

அவன் உதவிசெய்யும்பொழுது பதில் நன்றியை — கைம்மாறு எதையும் எதிர்பார்க்க வில்லையே ! என்னே ! சுயநலமற்ற — தியாகம் நிறைந்த அன்பு.

**மற்றவன் :**

தன் சொந்தப் பணத்தையும் அல்லவா செலவழித்தான்.

**ஒருவன் :**

அவன் செலவிட்ட பணம் பெரிதல்ல ; தானாக முன்வந்து இரக்கம் சொரிந்து அந்த அன்புச்செயலில் இறங்கிச் செய்த மனப்பக்குவம்தான் பெரிது ..... அதோ மீளவும் யேசு பேசுகிறார்... கேட்போம்.

**யேசு :**

கள்வர் கையில் அகப்பட்டவனுக்கு இம்மூவரில் யார் அயலவன் என உனக்குத் தோன்றுகிறது.

**ச. நி.**

வழியில் விழுந்து கிடந்தவனுக்கு இரக்கம் காட்டியவன் தான் அயலவன்போல் நடந்தான்.

**யேசு :**

நீயும்போய் அப்படியே செய்......

பாடல்

**சத்தியத்தின் அருட்சாரம்**
**சகவாழ்வின் திருச்சாரம்**
**நித்தியத்தின் பொருட்சாரம்**
**நிதம் அன்புக் குணச்சாரம்.**

**உரை :**

அன்பே இறைவன். அன்பே அனைத்துலகின் வாழ்வு. அன்பு வாழ்வே அருள்வாழ்வு. அன்பே அமலன்காட்டிய வழி...

விருத்தம்

**அன்பெனும் தெய்வம் ஈந்த அருட்பெரும் செல்வம் அன்பு**
**மன்புவி மலர்ந்து வாழ மணிச்சுடர் பரப்பும் அன்பு**
**துன்பமும் துயரமுந்தீர்க்கத் துணைவரும் தூய அன்பு**
**இன்பவான் அமலன் காட்டும் இதந்தரும் வழியும் அன்பே.**

(முற்றும்)

# கடவுள்தந்த இருமலர்கள்

சி. எ. செல்வராசா

**குலரத்தினம் தொடர்ந்து கூறுவது :**

அன்று நமது பள்ளிக்கூட விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. இதில் ஒரு சிறப்பு. எம்குழுவைசசேர்ந்த பத்துப் பேரும சேரன இல்லம் அதாவதுபச்சைஇல்லம. மொத்தம் மூன்று இலலங்கள். பச்சை, மஞ்சள், சிவப்பு இவற்றிற்கு முறையே சேரன், சோழன், பாண்டியன் என்று பெயர். சேரன இல்லத்தில் அறுபது பேர் ஆணகளும், ஐம்பதுபேர் பெண்களும இருந்தனர். ஏறக்குறைய அதுபோலவே மற்ற இரு இல்லங்களிலும்.

நம் கோயில் பூனை பங்கிராஸ் சோழன் இல்லம். விளையாட்டுப்போட்டி மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. எனக்கு, ஒன்று தொந்தி பெருத்த காரணம், இரண்டு மூக்குக்கண்ணாடி போட்டிருந்தகாரணம். இந்தப்பாழாய்ப் போன இருகாரணங்களும் சேர்ந்து என்னை விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளாமல் செய்துவிட்டன. கயிறு இழுப்பதற்கு மட்டும்போனேன். அதுவும் என்னைக் கடைசியில் நிறுத்தி என் அரையில் கயிற்றைக்கட்டிவிட்டார்கள். இவ்வொன்றில்தான், நான் கலந்துகொண்டேன் அதுவும நண்பர்களின் நச்சரிப்பால்.



அந்தக்கோயில் பூனைக்கு நல்ல திறமைகள் உண்டு. அவன் பல விளையாட்டுக்களில் கலந்துகொண்டான். முதலில் அரைமைல் ஓட்டம் நடைபெற்றது. அதில் பங்கிராஸ் அருள் இன்னும் நான்குபேர் கலந்துகொணடனர். ஓட்டமும் ஆரம்பமானது. எல்லோரும் ஓடினர்.

"கமஆன அருள் !"

"!...விடாதே, ஓடு !!"

"கமான்......சோழன் இல்லம்."

"என்ன இந்தக் குதிரை நடக்குது !"

"அரபிக் குதிரை அருள் கமான்...கமான்.

கூட்டத்தின் கூச்சல் வானைப் பிளந்தது அனைவரும் ஓடிக்கொண்டிருந்தனர்.


முதல் இரு சுற்றில் அருள் தான முதலில்வந்தான்; கடைசிச்சுற்றில் பங்கிராஸ் அருளுடன் போட்டி போட்டான. இருவரும் ஓடினார்கள். இருவரும் களைத்துவிட்டனர். பங்கிராஸ் சோழன் இல்லத்திற்கு முன்வரும்போது ஒரு மாணவி ஓடிவந்து பங்கிராசின் கையில் "குளுக் கோசை" கொடுத்தாள். அவளை எனக்கு நன்றாகத் தெரியும். அவள் பெயர் இதயராணி. "குளுக்கோசை"வாயில் போட்டுக் கொண்டு ஓடினான் பங்கிராஸ். இவ்விதம் ... முதலாவதாக அவனே வந்தான்.

சோழன் இல்லத்தில் ஒரே கூச்சல். கைதட்டல். பங்கிராஸ் தள்ளாடித் தள்ளாடி சோழன் இல்லத்தை நோக்கி நடந்தான். இதயராணி ஓடி வந்து அவனைத் தாங்கிக் கொண்டு நடந்துவந்தாள். சிஸ்டர் மேரி பங்கிராசுக்கு ஏதோஒரு பானத்தை கொடுத்துக் கொணடிருந்தார். தொடர்ந்து விளையாட்டுப்போட்டி நடந்துகொண்டு இருந்தது. சோழன் இல்லமே அதிக புள்ளிகள் எடுத்தது. பிறகு பெண்களின் ஓட்டப் போட்டி நடைபெற்றது அதில் ஐவர் ஓடினர். அதில் இதயராணியே முதலாவதாக வந்தாள்.

சோழன இல்லத்தில் புள்ளிகள் ஏறிக்கொண்டு போயின. அடுத்து 'சயிக்கிள்' சவாரி நடைபெற்றது. அதில் பங்கிராஸ் கலந்து கொண்டான். பங்கிராசைக் கண்டதுமே எனக்கு நம்பிக்கையில்லை, அவனே அதில வெற்றியடைவான் என்று நினைத்தேன். நினைத்தது நடந்தது. அவன் வெகுவேகமாக ஓடினான். அரபிக்குதிரை என்று பட்டம் வாங்கிய அருள் நம் இல்லத்தின் சார்பாக ஓடினான். ஆனாலும் பாவம்... அவன் சயிக்கிள் இடைவழியில் 'ஸ்றைக்' ஆரம்பித்துவிட்டது. பங்கிராசே வெற்றியடைந்தான். அவன் வந்த வேகத்தில் சயிக்கிளை சோழ இல்லத்தின் முன் போட்டுவிட்டு உள்ளே போய் ஒரு 'பெஞ்சி'லே படுத்துவிட்டான். இதயராணிஓடி அவன் போட்டுவிட்டுவந்த 'சயிக்கிளை' எடுத்துக்கொண்டு போனாள். ஆம் எனக்கு நன்றாகத் தெரியும் அந்தச் 'சயிக்கிள்' வண. அமலதாசனுடையது.

விளையாட்டுப்போட்டி முடிந்தது. பரிசு வழங்கும் கட்டம் வந்தது. நாம் எல்லோரும் மவுனமாக இருந்தோம். சோழன் இல்லமே வெற்றியடைந்தது. அந்த இல்லத்தைச் சேர்ந்த மாணவர்கள் அட்டகாசம் வானைப்பிளந்து கொண்டிருந்தது. பாடசாலைத் தலைமைஆசிரியர் ஒரு சொற்பொழிவு ஆற்றினார். அதில் சோழன் இல்லத்தையும், சிறப்பாக பங்கிராசையும் புகழ்ந்து பேசினார். மற்ற இரு இல்லத்தினருக்கும் தனது அனுதாபத்தையும, ஊக்கத்தையும் அளித்தார்.

அதன்பின் பரிசுகொடுக்கும் படலம் ஆரம்பித்தது. பரிசு வாங்குவோருக்கு அவரவருடைய இல்லத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஆர்ப்பரித்தனர். பங்கிராஸ்...... அந்தக்கோயில் பூனை பல விளையாட்டுக்களில் கலந்துகொண்டு வெற்றிபெற்றதால பல பரிசில்களைப் பெற்றான். பங்கிராஸ் பரிசுகளை வாங்கும்போது சோழன் இல்லத்தினர் இட்ட அட்டகாசம் காதைப் பிளந்துவிடும்போல் இருந்தது. பங்கிராஸ் ஒவ்வொரு பரிசையும் வாங்கிக் கொண்டுவந்து இதயராணியிடம் கொடுத்துக்கொண்டிருந்தான்.



விளையாட்டுப் போட்டி முடிவடைந்தது. எல்லோரும் வீடுதிரும்பிக் கொண்டிருந்தனர். நானும் எனது நண்பர்களும் செல்வத்தின் காரில் மனோகரா ஹோட்டலில்வந்து சிற்றுண்டி அருந்திவிட்டு வீடு திரும்பினோம். தூரத்தே சாலையின் ஓரத்தில் நடந்துகொண்டிருந்தனர் ஒரு வாலிபனும், இளநங்கையும். காரில் இருந்த வண்ணம் எட்டிப் பார்த்தேன். அப்பெண்ணின கையில் பல பரிசுப்பொருட்கள் இருந்தன. அவர்கள் வேறுயாருமல்ல, பங்கிராசும் இதயராணியுமே. அப்போது நேரம் ஒன்பது மணியிருக்கும்.

(வளரும்)

**எதிர்பாருங்கள் !**

சத்திய திருச்சபையில் மறுமலர்ச்சியை
ஏற்படுத்திய அருளப்ப அண்ணாவின்
வாழ்க்கைப் பாதையிலிருந்து பல சுவையான
ஏடுகளைத் தரும்

**"புரட்சித் துறவி"**

தொடர் நவீனத்தை.
அன்னாரின் 6-வது நினைவுதினத்துடன்
ஆரம்பமாகிறது.

தொகுத்தளிப்பவர் : சாமுவேல் பெனடிக்ற்.

● சென்ற 19-ம்தேதிகாலை அனுப்பிவைக்கப்பட்ட 'அப்பொலோ — 10' என்ற வான வெளிக்கப்பல் விநாடி ஒன்றுக்குப் 11,602 அடி வேகத்தில் சந்திரனைநோக்கிப் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தது. அதிலே செல்லும் விண்வெளிவீரர்கள் பூமியைப் படம்பிடித்து அனுப்பியுள்ளனர். இப்படங்கள் ஏற்கனவே அமெரிக்கடெலிவிஷனில் காட்டப்பட்டு விட்டன.

● நியூயோர்க் நகரிலிருந்து அத்திலாந்திக் சமுத்திரத்துக்கு மேலாக லண்டன்நகர்வரை ஆரம்பமான ஆகாயவிமானப் பந்தயத்தில் ஒருபிரித்தானிய கடற்படை அதிகாரியான லெவ்ரினன்ட் போல் வாட்டர் ஹவுஸ் எனும் விமானி அச்சமுத்திரத்தை 5 மணி 30 நிமிஷம் 24 செக்கனில் நடந்து வெற்றியீட்டியிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகளிர் மன்றம்

**அன்புநிறை நேயர்களே! வணக்கம்!........**

சென்ற வாரக் குட்டிச் சம்மனசு எல்மோ கதையைக் குட்டிச் சிறுவர் மட்டுமல்ல; பல அப்பாக்கள், அம்மாக்கள், மாமாக்களும் ரசித்துள்ளனரென அறிந்து உவகையடைந்தோம். இதையும் கேட்டு ரசியுங்கள். இது கற்பனைக் கதையல்ல. உண்மையாக நடப்பதொன்றே.

அன்றொரு நாள். மாலா பாடசாலையிலிருந்து வீடு திரும்பியதிலிருந்தே ரொம்ப "பிஸி"யாகக் காணப்பட்டாள். அம்மாவிடம் ஓடிப்போய் "அம்மா!... இன்று இரவிலிருந்து ஒவ்வொரு நாளும் குடும்ப செபமாலை சொல்வோமா?"... என்று கேட்டாள். அம்மா ஆமோதித்தாள். அப்பாவிடம் ஓடிப்போய் "அப்பா!...நீங்கள் மாலை நேரங்களில் உலாவப் போகிறீர்களே. கெதியாக வந்துவிடுகிறீர்களா?..." என்று உசார்ப்படுத்தினாள். அண்ணன்மாரிடம் "அண்ணாக்களே!... 'கிரிக்கெட்' அடித்துவிட்டு நேரத்தோடு ஜெபமாலைக்கு வந்துவிடுங்கள். இல்லாவிட்டால் காலொடிந்து ஆஸ்பத்திரியில் கிடப்பீர்களாம்" என்று பயமுறுத்தி வைத்தாள். அக்காவிடம் "அக்காச்சி!... 8 மணிக்கு முன்னம் படித்து முடித்துவிடு. செபமாலைக்கு வந்தால்தான் நீ சோதனை பாஸ்பண்ணுவாய்" என்று நிச்சயமாகக் கூறினாள். அப்புறம் பாட்டியிடம ஓடிப்போனாள். "பாட்டி!... பாட்டி!... உங்க வெற்றிலை பாக்கு இடிக்கும் சத்தம் செபமாலைக்குப் பிறகுதான் கேட்கணும்" என்று அதிகாரமிட்டாள்.

குட்டி பபா மாலாவில் எல்லோருக்கும் பிரியம்தானே. அவளைச் சிணுங்க வைக்கக் கூடாதே என்று ஒவ்வொருநாளும் எல்லோரும் ஆஜராகி விடுவர் குடும்ப ஜெபமாலைக்கு. அப்பா மாலாவிடம் கேட்டார் ஒருநாள். "மாலு!... குடும்பஜெபமாலை சொல்வதில் உனக்கென்ன அக்கறை? எங்களெல்லாரையும் ஜெபமாலை சொலல வைத்துவிட்டு நீ மட்டும் 4-ம், 5-ம் காரணிக்கங்களில் நித்திரையாகி விடுகின்றாயே" என்றார். "அதனாலென்ன!... நான் நித்திரை கொண்டாலும் என் கழுத்தில் பூமாலை அலங்காரம் நடக்கத்தானே செய்யும்" என்றாள் மாலா.

என்னவென்று திகைக்கிறீர்களா நேயர்களே! மாலா சொன்னது உண்மைதான், நாம் எல்லோரும் கூடியிருந்து குடும்ப ஜெபமாலை ஓதுகையில் ஒரு சம்மனசு நம்பக்கத்தே அமர்ந்துகொள்கின்றது. பொன்னாலான வடமொன்றில் பிரியத்த மந்திரங்கட்கு ரோஜாப்பூக்களும், பரமண்டல மந்திரங்கட்கு லீலிப்பூக்களுமாகத் தொடுத்துக் கொண்டே வருகின்றது. ஜெபமாலை முடிந்ததும் அங்கு குழுமியிருக்கும் குடும்ப அங்கத்தவர்களில் மிக இளைய குழந்தையின் கழுத்தில் அவ்வழகுப் பூமாலையைப் போட்டு அழகு பார்த்துவிட்டு வானுலகத்துக்குப பறந்துசென்று மரியன்னை பாதத்தில் அதனைச் சாத்துகின்றது. இந்த உண்மையை மாலாவின் ஆசிரியையான கன்னிகை மேரி வகுப்பில் கூறியிருக்கின்றாள். எனவே, மாலா குடும்ப ஜெபமாலை சொல்லுவதில் ஆர்வம் காட்டியதில் தவறில்லையே.

நேயர்களே!... குடும்ப ஜெபமாலையில் உங்கட்கு உற்சாகமூட்ட இது ஓர் சிறந்த எடுத்துக் காட்டல்லவா?

ராஜா.

## வாழ்க நம் ஆயர்!....

யாழ்எழிற் திருச்சபையின் மணிவிளக் கொளியேயெங்கள்
மாநிலம் வியந்துபோற்றும் மாதவா! போற்றி!..
போற்றி!...
வாழ்வொளிர்ச் செம்மலே யெம் வாழ்க்கையின்
அணிகலனே
தாழ்விலா எமிலியானுஸ் தலைவனே!...போற்றி!...
போற்றி!...
ஈர்பத்து ஆண்டுகாலம் இறைவழி எமை நடாத்திப்
பார்புகழ் சேவையாற்றும் பார்த்திபா!.. போற்றி!...
போற்றி!...
நீடிய ஆயுள் பெற்றே நிறைந்த நற்சேவையாற்ற
நிமலனை மகளிர் மன்றம் இறைஞ்சிடும்!...போற்றி!...
போற்றி!

# குழந்தை யேசுவும் குறும்புகள் செய்வாரா?

குழவிகள் குறும்பு செய்வது வழக்கமதானே! அதனை யாருமே ரசிக்கத்தான் செய்வார்கள். குழந்தை யேசுவுக்கும் குறுமபுகள் செய்வதென்றால் ரொம்பப் பிடிக்கும். தம்மை மிக மிக அன்போடு நேசித்த புனிதர்கள் வாழ்வில் அவர் எத்தனை திருவிளையாடல்களை நடத்தியிருக்கிறார் தெரியுமா?

### ஏட்டிக்குப் போட்டி

ஓர்நாள். மடத்துச் சிற்றாலயதில் ஜெபித்துவிட்டு வெளியே வந்தாள் சிறிய புஷ்பம் தெரேஸ். ஆலயத்தின முன்னுள்ள சிறிய மலர்வனத்தில் ஓர் சிறுவன் விளையாடிக் கொண்டிருந்தான். கொழு கொழுவென்று அழகுச் சுடராகக் காட்சியளித்த அப்பாலனின் தோற்றம் அவளைக் கவர்ந்தது. ஆவலோடு அவனண்டை சென்ற தெரேஸ் கன்னியர் மடத்தினுள்ளே சிறுவன் எப்படி வந்திருக்க முடியும் என ஓர்கணம் அதிசயப்பட்டாள். அவள் கிட்டே வந்து குழந்தையின் நாடியை உயர்த்தி அவனைத் தன் மலர் விழிகளால் நோக்கினாள். சிறுவனும் தன் பிஞ்சுக் கரத்தால தெரேஸின் நாடியை உயர்த்தி அவளை நோக்கினான். தெரேஸின் உதடுகள் புன்னகையை உதிர்த்தன. சிறுவனும் பதிலுக்கு கண்களைச் சிமிட்டிக்கொண்டே புன்னகை புரிந்தான். மெய்சிலிர்த்துப்போன தெரேஸை நோக்கி சிறுவன், "உங்கள் பெயரென்னவோ?..." என்று கேட்டான். "என் பெயர் குழந்தை யேசுவின் தெரேஸ்" என்று விடை கூறிய தெரேஸ் "ஆமாம் தம்பி!... உன் பெயரென்ன? சொல்லேன்!... என்று வினவினாள். "என் பெயரா?... என் பெயர் கன்னிகை தெரேஸின் குழந்தை யேசு" என்று பதிலிறுத்த சிறுவன் அடுத்த கணம் மறைந்தே போனான்.

வெள்ளத்தில் மூழ்கிவிட்ட தெரேஸ் குழந்தை யேசு அன்று செய்த குறும்பை ரசிக்காத நாளேயில்லை யெனலாம்!...

### நம்மைப் பார்க்கின்றார் ஒருவர்!....

புதுமை வரத்தர் அந்தோனியார் பக்திப்பரவசத்தில் ஆழ்ந்திருந்தார் ஓர்நாள். அப்புறமாக ஜெபப் புத்தகத்தைத் திறந்து ஜெபவேண்டுதல்களை வாசிக்கத் தொடங்கினார். சடுதியாகப் புத்தகத்தின் பக்கங்கட்குமேல் குழவியொன்றின் பிஞ்சுக் காலகள் நர்த்தனமாடின. நிமிர்ந்து பார்த்த போது பாலயேசு புன்னகை பூத்தார் புனிதர் அந்தோனியாரை நோக்கி. மறுகணம் தன் இரு அழகுக் கரங்களாலும் புனிதரின் கழுத்தைக் கட்டி அரவணைத்தார். கன்னத்தோடு கன்னம் சேர்த்து மழலை பேசினார். குழந்தைப் பாலனின் அன்பு அரவணைப்பில் திக்குமுக்காடிய அந்தோனியாரோ உலகையே மறந்திருந்தார். அந்தோனியார் வசித்த வீட்டின் சொந்தக்காரனான தீசோ அவ்வறையின் பக்கமாக வந்தபோது அவ்வறையினுள் தெய்வீக பிரகாசம் ஜொலித்துக் கதவுகளின் கீழாகவும், சாளரங்களின் மேலாகவும் பிரதிவிம்பத்தைக் கண்டான். ஒட்டப்பட்டிருந்த கதவின் இடுக்குவழியாக உள்ளே பார்த்தான. குழந்தை யேசுவின் குட்டி நாடகம் அவனை வியப்பிலாழ்த்தியது. பல நிமிடங்களாகப பார்த்துக்கொண்டிருந்தான் அத்தெய்வீக காட்சியை. சிறிது வேளையில் திடுக்கிட்டான். ஏன் தெரியுமா?... புனிதரின் கைகளில் புத்தகத்தின்மேல் நின்றிருந்த குழந்தை யேசு புனிதர் அந்தோனியாரைத் தன் லககளால் தட்டித் தன் சுட்டுவிரலால் கதவுப்பக்கம் காட்டியது. "நம்மைப் பார்க்கின்றார் ஒருவர்" என்பது அந்தச் செய்கையின் அர்த்தம். அப்புறம் வாயில் விரலை வைத்து ஒன்றும் பேசவேண்டாம் என்று காட்டியதுமன்றி கதவுப்பக்கம் திரும்பிப் பார்க்கவும் வேண்டாம் எனத் தன் அழகுக் கரத்தால் சைகை காட்டியது. சுட்டுவிரலால் கதவுப்பக்கம் குழந்தை யேசு தன்னைக் காட்டியதைக் கண்டு முதலில் திடுக்கிட்ட தீசோவும் ரசித்தான். புனிதரும் ரசித்தார். நாமும்தான் இக்கதையைக் கேட்டு ரசிக்கின்றோமல்லவா?

### நீர் மடையனா?.... நான் மடையனா?....

பால யேசு பெரும் வேத [illegible]

தட்டி வைத்தார் தன் குறும்புச் செய்கையால், புனிதர் அகுஸ்தீனாரைக்கூட அவர் விட்டுவைக்கவில்லையே!... பரமதிரித்துவத்தின் இரகசியத்தைக் கண்டுபிடித்துவிடலாமென அல்லும் பகலும் சிந்தனையிலாழ்ந்திருந்தார் அகுஸ்தீனார். ஓர்நாள் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாமல் கடற்கரையில் யோசனை மேலிட்டவராய் உலாவித் திரிந்தார். அத்தருணம் கடற்கரையில் ஒரு சிறுவன் ஒரு சிறு குழியைத் தோண்டிவிட்டபின் சிப்பி ஒன்றினால் கடல் நீரை அள்ளி அள்ளிக் கொண்டு வந்து குழியினுள் ஊற்றிக் கொண்டிருப்பதை அவதானித்தார். "தம்பி!... நீ என்னதான் செய்கிறாய்?" என்றார் புரியாதவராக. "நானா!...நான் இந்தப்பெரிய சமுத்திர நீரை இந்தச் சிப்பியினால் இச்சிறு குழியினுள் ஊற்றப் போகிறேன். உமக்கென்ன?" என்றான் பையன். "ஏ!... மடைப்பயலே!... என்ன புத்திகெட்ட அலுவல் செய்கிறாய். இப்பெரிய கடல் நீரை இச்சிறு குழி கொள்ளுமா? அதுவும் இச்சிறு சிப்பியினால் எத்தனை தரம் அள்ளிஊற்றி முடிப்பாயோ!" கேட்டார் அகுஸ்தீனார். "மடையன் நீரா!... அலலது நானா?"... கேட்டான் பையன் "உமது சிறியமூளையென்னும் சிப்பியால் கடலைப்போல் எல்லையற்ற தேவபரம இரகசியத்தைநீர் ஆராய்ந்து முடிப்பதற்குள் இக்கடல் நீரைஇச்சிறு குழியினுள் இச்சிப்பியால் நான் நிச்சயம் ஊற்றி முடிப்பேன்" என்று சொன்னதுதான் தாமதம் மறைந்துவிட்டான் சிறுவன். குழந்தை யேசு தன் குறும்புச் செயலினால் தன் மடமைத்தனத்தைச் சுட்டிக்காட்டியதைக் கண்டு அதிசயித்தார் அகுஸ்தீனார்.

## "திருமணம் முடிவில்லாத் தேன்மதியா?

"திருமணம் செய்துகொண்டு இல்லறவாழ்க்கையில் பிரவேசிக்குமுன் மணவாழ்வு ஒரு முடிவில்லாத் தேன்மதியென்று பெரும்பாலானவர் எண்ணி வருகிறார்கள். திருமணம் செய்துகொண்டவர்கள் அனுபவிக்கும் சில உல்லாச நேரங்களைக் காண்பவர்கள் அவர்கள் வாழ்வு சதா இன்ப வாழ்வு என நினைக்கின்றனர், ஆனால் உண்மை நிலை இது அல்ல. குருமாரின் விரத்தத்துவம் அவசியமில்லை என அபிப்பிராயப்படும் சிலர், தனிமையால் வரும் துன்பங்கள் யாவும் கலியாணம் செய்துகொண்டவர்களுக்கு இல்லை என்று எண்ணுவது தவறு. இத்துன்பத்திலும் பார்க்கப் பலமடங்கு கூடிய துன்பம் திருமணவாழ்வில் உண்டு" என்று தமது 65-ம் வயதில் குருப்பட்டம் பெற்றுக்கொண்ட வணக்கத்துக்குரிய பொலியற் சுவாமியார் அண்மையில் இங்கிலாந்தில் கூறியுள்ளார்.

# அம்மாவும் நீயே!.... அப்பாவும் நீயே!....

தாயோடு அறுசுவை போம்
தந்தையொடு செல்வம்போம்!...
தாழ்வுற்ற நிலை வந்தால்
தாளாத உறவும்போம்!...
பாயோடு படுத்து விட்டால்
பரிந்துநிற்பார் துணையும்போம்!...
தாய்மரி நீயொருத்தி மட்டும்
தள்ளிவிடாய் எந்தனையே!...

* * *

அன்னையை இழந்து நின்றேன்
அவளன்பைத் தந்தாரில்லை!...
தந்தையும் பிரிந்து சென்றார்
தாபரித்தார் யாருமில்லை!...
இன்னலிலே அழுந்தி நின்றேன்
இரங்கினார் எவருமில்லை!...
அன்னையென்றே ஓடி வந்தேன்
அரவணைத்தாய் அன்புடனே!...

* * *

அம்மா!... என்றே யழைக்க
ஆருமில்லை!... என்றழுதேன்
அப்பா!... என்றுசை கூர
எவர் வருவார்? எனத்துடித்தேன்
அம்மாவின் அணைப்பீந்தா யென்
அப்பாவின் துணையு மீந்தாய்!...
அம்மாவும் நீயானாய்! என்
அப்பாவும் நீயானாய்!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை எழுதிப் பரிசு பெறுங்கள்

# காவலன் சிறுகதைப் போட்டி

## இல. 2

**1-ம் பரிசு பத்து (10/-) ரூபா.**
**2-ம் பரிசு ஐந்து (5/-) ரூபா.**

சிறந்த கருத்துள்ள கதைகள் காவலனில் பிரசுரிக்கப்படும்.

- நீங்கள் எழுதவேண்டிய சிறுகதை "பெற்றோரைப் பேணுதல்" என்னும் பொருள் கொண்டிருக்க வேண்டும்.
- கதைகள் சொந்தக் கற்பனையாக அமைய வேண்டும்.
- 300 சொற்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.
- வெண் தாளில் (புள்ஸ்காப்) ஒருபுறத்தில் மட்டும் எழுதவேண்டும்.
- இப் போட்டியில் பாடசாலை மாணவர்கள் மட்டும்தான் பங்கு கொள்ளலாம்.
- காவலனில் உள்ள அனுமதிப் பத்திரத்தைப் பூர்த்தி செய்து, கதையுடன் இணைத்து அனுப்பவேண்டும்.
- முடிவு தேதி 31-5-69.
- அனுப்பவேண்டிய முகவரி:

"காவலன் சிறுகதைப் போட்டி,"
தபால் பெட்டி இல. 2,
யாழ்ப்பாணம்.

### காவலன் சிறுகதை அனுமதிப் பத்திரம்

இலக்கம் 2.

பெயர்: ……………………………………

வகுப்பு: ……………………………………

பாடசாலை: ……………………………………

……………………………………

# மாகாண சங்கமும் மறுமலர்ச்சி மாற்றமும்

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வெளிநாட்டு மறைபோதகர்கள் அடியிட்ட திருச்சபை அவர்களைத் தொடர்ந்துவந்த தேசியக் குருக்களினால் ஒரேவித முறையினால் கண்காணித்து வளர்க்கப்பட்டிருக்கின்றது. ஆனால் திருச்சபையை புதிய வட்டாரங்களில் தோன்றப் பண்ணவோ, பிறசமயத்தவர்களுக்கு அதன் உண்மை உருவத்தைக் காண்பிக்கவோ நாம் செய்த முயற்சிகள் மிகக் குறைவு. சமூக சேவைகளின் மூலம் நாம் மறைமுகமாக கிறிஸ்துவிற்கு சாட்சியம் அளித்திருக்கின்றோம். ஆனால் நேரடியாகக் கிறிஸ்துவை அறிவிப்பதற்கும் அவரை நடைமுறையில் பிரசன்னமாக்குவதற்கும் நாம் செய்யும் முயற்சிகள் தொகையிலும், வகையிலும் அதிகரிக்கப் படவேண்டும்.

* * *

அண்மையிலே திருச்சபையின் மனுஷீக அமைப்புகள் (Visible Structures) ஆழ்ந்த குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாயிருக்கின்றன. இவ்வமைப்புகளைக் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றி அமைப்பது திரு ஆட்சி அமைப்பாளரின் திருக்கடன் என்று பரிசுத்த தந்தை ஆறுவது சின்னப்பர் கடந்த வாரம் வற்புறுத்தியிருக்கின்றார். இந்த அமைப்பு நடைமுறையிலே மாற்றம்பெற்று இலங்கைவாழ் மக்கள் முன்பாக திருச்சபையின் உண்மையான உருவத்தை காட்டவேண்டும் என்பது சகலரதும் விருப்பமாகும். ஆகையினால் மாகாணசங்கம் பிறப்பித்த திட்டங்களை தாமதமின்றி தயங்காது அமுல் செய்ய எல்லோரும் முன்வரவேண்டும்.

* * *

இலங்கையின் திருச்சபை பரப்பிலும் தொகையிலும் மிகச் சிறியது. மக்கள் ஒருவரையொருவர் நன்கறிவர். கலாச்சாரம் பண்பாடு இவைகள் இனத்திற்கு இனம் ஆழமாக வித்தியாசப் படவில்லை. ஆகையால் மாற்றங்கள் இத்தீவின் எத்திசையிலும் ஒரே வேகத்துடன் முன்னேறுவது வரவேற்கத்தக்கது.

* * *

இலங்கைத் திருச்சபையின் நன்மைக்காக ஆவியின் ஏவுதலினால்வரும் மாற்றங்களுக்கு குருக்களும் மற்றும் பொறுப்பாளர்களும் வெறுப்புடன், எதிர்ப்புடன் அல்லது சகிப்புத் தன்மையுடன் இணங்குவது கிறிஸ்துவ மனப்பான்மை அல்ல. ஏதோ மாற்றங்கள் திரு ஆட்சியினரால் திணிக்கப்பட்டு விட்டதே என்பதற்காக அரைமனதுடன் விட்டுக் கொடுப்பது திருச்சபை வேண்டிநிற்கும் மறுமலர்ச்சியைக் கொண்டுவர முடியாது.

மேற்கூறிய அம்சங்கள் அடங்கிய ஒரு விடைக்கு நாம் எல்லோரும் செபிக்க வேண்டும். செயல்படவேண்டும்.

புத்தகமதிப்புரை

## குலமலர்

ஆக்கியோன்—திரு. ச. அமிர்தநாதர்.

நூல் வெளியீடு—கலைமன்றம், நுவரெலியா.

பதிப்பு—அசோகா அச்சகம், இருகலை.

விலை—1-25.

கிடைக்குமிடம்—கலைமன்றம், தபால்பெட்டி 41. நுவரெலியா.

இந்நூல் கல்வி, கலை, கலாச்சாரம் ஆகியவற்றைத் தனது குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றிவருகின்ற நுவரெலியாக் கலைமன்றத்தின் வெளியீடாகும். கவிதைத்தொகுதியாக "அழகு" என்ற பெயருடன் தமமுடைய முதல் வெளியீட்டை வெளிவரச் செய்த ஆசிரியர் இப்பொழுது "குலமலர்" எனும் பெயருடன் தமது இரண்டாவது வெளியீடு வெளிவரச் செய்திருக்கின்றார்.

தமிழார்வம்கொண்டு அமிழ்தினுமினிய ஆழிபோன்ற அம்மொழியில் மூழ்கிச் சுவைத்து ஆனந்திக்கும அறிஞர்கள், ஆசிரியர்கள், பண்டிதர்களில் ஒருபாலார் கதைகள், கட்டுரைகள் எழுதுவதையே தமது பொழுதுபோக்காகக் கொண்டு அவற்றின் மூலம் தமிழுலகுக்கு அருமபணி ஆற்றுகின்றார்கள். மற்றொருபாலார் கவிதை, காவியங்கள் புனைவதைத் தம்முடைய பொழுதுபோக்காகக் கொண்டு அவற்றின்மூலம் தமிழ்அன்னைக்கு மலர்கள்பல அணியணியாகச் சாற்றுகின்றார்கள். பிந்தியவற்றிலே திரு. அமிர்நாதர் சாற்றியுள்ள குலமலரும் ஒன்றாகும். கவிதை, காவியம் புனைவதிலே தமது கண்ணையும், கருத்தையும் செலுத்திக் கடந்த இருநான்கு ஆண்டுகளாக அதில் ஈடுபட்டுவந்த ஆசிரியர் இப்பொழுது அஃது இனிதே கைவரக் கண்டுள்ளார் என்பதற்கு அவர்புனைந்துள்ள 'அழகு' "குலமலர்" எனும் இருவெளியீடுகளும் போந்தசான்றுகளாகும்.

இயற்கையை அழகுபடுத்துவனவாய், இயற்கை எழிலை வர்ணித்து மகிழ்வூட்டுவனவாய் இம்மலரில் காணப்படும் இன்பமான பாக்கள் காந்தன், சாந்தியாகிய இருவரும் இயற்கையிலே கண்டடையும் பேரின்பத்தை நுகர்ந்துகொள்ளும் மாட்சியேமாட்சி. அதனை வர்ணித்துச் செல்லும் மனோகர காட்சியேகாட்சி. ஆசிரியரின் தமிழ்ப்பற்று வளருக! காலப்போக்கிலே அவரது கவிப்பொருளும் விரிவடைக!

● சின்னப்ப பாப்பரசர் போலாந்தைத் தரிசிக்க அனுமதி வழங்குமாறு கேட்டு அந்நாட்டின திருச்சபை மேலதிகாரியான கருதினால் வைசின்ஸ்கி சென்ற மார்கழிமாதம் வத்திக்கானிலிருந்து திரும்பியதும் போலிஷ் பிரதமர் சைருன்கியேவிஸுக்குக் கடிதம் எழுதியிருந்தார். ஆனால், அதற்குப் பதில் இல்லை பதிலை இன்னுமே அவர் எதிர்பார்த்திருப்பதாக அங்கு திருச்சபை வட்டாரங்கள்தெரிவிக்கின்றன.

**CITY & GUILDS CLASSES**

City & Guilds, London, Electrical Engineering Practice.

(a) Preliminary
(b) Intermediate

Classes with practicals in Electricity and Magnetism A.C. and D.C.

**Admission closes on 31st May.**

Apply :

THE DIRECTOR,
Long's Institute of Techno-Engineering,
C/o. St. Patrick's College,
Jaffna.

அன்பர் அரங்கேற்றியது

# பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரே முக்கிய ஆசிரியர்

"பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு உயிர் அளித்திருக்கிறார்கள என்பதால் அவர்களுக்குக் கல்வி அளிக்கவேண்டியது அவர்களது தலையாய கடமை. எனவே அவர்களே குழந்தைகளுக்கு முதன்மையான — முக்கியமான ஆசிரியர்கள். பிள்ளைகளின் கல்வியை முழுமையாக பள்ளிக்கூடத்தில் ஒப்படைத்துவிட்டு எல்லாம் முடிந்ததென்று இராது, வீட்டிலும் பெற்றோர் பிள்ளைகளை விளங்குவதிலும் அவர்களுக்கு அன்புகாட்டுவதிலும், அவர்களுடன் மனந்திறந்து உரையாடுவதிலும் தங்கள் இன்றியமையாத கடனைச் செய்யவேண்டும்."

இவ்வாறு திருமதி மார்கிரட் சவரிமுத்து சென்ற 16-5-69 இல் யாழ்ப்பாணம், டிமொன் போட் சாலையில் நடைபெற்ற அன்பர் அரங்கத்தில் கருத்துத் தெரிவித்தார்.

"பணம் படைத்த பெரியோர் தன்னும் பிள்ளைகளின் கல்வியைப் பள்ளியிலும், தனிப்பட்ட கற்பித்தலிலும் (Private tuition) ஒப்படைத்துவிட்டு, பிள்ளைகளுக்குப் பணம் தேடுவதிலும், வீடு கட்டுவதிலும், சீதனம்தேடுவதிலும் நேரத்தைச் செலவழிக்கின்றனரே ஒழிய, தாங்கள் நேசிக்கும் அதே பிள்ளைக்கு அன்பைக் காட்டவோ, அதன் பிரச்சினைகளையறிய முயலவோ, அதனுடன் உரையாடவோ சில மணித்தியாலங்களைப் பிள்ளைகளுடன் வீட்டில் கழிக்கமுடியாதிருப்பது மடமைத்தனமென்றும் பலரால் தெரிவிக்கப்பட்டது.

# கிறிஸ்தவ திருமறை நூல்விழா

**மட்டக்களப்பு:**

வைகாசித்திங்களின் இறுதி இரு தினங்கள்—அகில இலங்கையின் கவனம் முழுவதும் கிழக்கிலங்கை நோக்கிச் செல்லுகின்றது. கிறீஸ்தவரும் கிறீஸ்தவரல்லாதோரும் ஆவலோடு எதிர்பார்த்த திருகோணமலை—மட்டக்களப்பு மறைமாநில மறைக்கல்வி நடுநிலையம் நடாத்தும் கிறீஸ்தவ திருமறை நூல்விழாவினை மட்டுநகர் முதன்முறையாகக் கண்டுகளிக்கப்போகின்றது. இவ்விழா இருதினங்களிலும் மட்டுநகர் மாநகரசபை மண்டபத்தில் மாலை நிகழ்ச்சிகளாக நடந்தேறும்.

முதல்நாள் நிகழ்ச்சிகள் போப் அய்யர் அரங்கிலே அமையும் பட்டிமன்றமாகும். கருத்துரைகளும்— வழங்குவோரும். "பழையதும் புதியதும்"—**அருள்திரு. க. சாமிநாதன்.** "யார் இந்தக் கிறிஸ்து"—**திருமதி. இராமச்சந்திரன்.** கிறீஸ்தவம் ஓர் உலகப் பொதுமறை"— **அருள் திரு. எஸ். எம். யேக்கப்'** (மெதடிஸ்ற் சபை). "அற உணர்வும் அண்ணல் யேசுவும்'. —**புலவர் ஏ. டபிள்யூ, அரியநாயகம்.** "பழையஏற்பாடு ஒருவரலாற்று நூலா"

**— அருள் திரு. றே. திருஞானதீபன்.**

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் யாவும் வீரமாமுனிவர் அரங்கிலே நடந்தேறும. கலைப்பூங்காவில் காதுக்கினிய கானங்கள், பார்வைக்கு விருந்தளிக்கும் நடனங்கள், மற்றும் வீணைக்கச்சேரி, வில்லுப் பாட்டு ஆதியனவும் இடமபெறும். முடிபாக "சக்கடத்தார்" என்னும் நகைச்சுவை நாடகத்தினையும் சமய நாடகமான "புரட்சித் துறவி"யையும் வீரமாமுனிவர் முத்தமிழ் மன்றம் மேடையேற்றி வைபவத்தினை நிறைவுக்குக் கொண்டுவரும் இக்கிறீஸ்தவ திருமறை நூல் விழாவிற்கு அனைவரும் அன்புடன அழைக்கப்படுகின்றனர்.

(எமது விசேஷ நிருபர்)

● மொண்ரே கார்லோவிலே சமீபத்தில் "கிறிஸ்தவ ரெலிவிஷன் வார"ப் போட்டியிலே பி. பி. சி. ரெலிவிஷன் முதல் பரிசில் பெற்றுள்ளது. அது ரெலிவிஷனிலே ஐந்து திருக்காய வரத்தாராயிருந்து அண்மையில் பரமபதமடைந்தவண. பியோ சுவாமிகளின் புனித வாழ்க்கைவரலாற்றை சினிமாப்படக் காட்சியாய்க் காண்பிக்கலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வமும் தீபமும்



**வேள்வித் தீ:**

"சோதியாய் தோன்றும்
உருவமே
அருவம் ஒருவனே" —
(திருவாசகம்)

தீயைக் கண்டு திகைத்தான் ஆதி மனிதன். அதன் ஆற்றலைக்கண்டு வியந்தான், தீப ஒளியைக் கண்டு மருண்டான். அதனை ஆட்கொண்டு அடிமைப்படுத்த விரும்பினான். தீ பயக்கும் நன்மைகளையும் அது விளைக்கும் தீமைகளையும் கண்டு அதை ஏற்றிப் போற்றியது மட்டுமின்றித் தெய்வமாகவும் வணங்கினான். சுமேரியர், அக்கேடியர், துரானியர், ஜப்பானியர், கிரேக்கர்போன்ற ஆதிவாசிகள் பலர் தீயைத் தெய்வமாக வணங்கினர் என்பது சமய ஒப்புரவு வரலாறு; கற்பவர்கள் கண்டமுடிவு பண்டைய பாரதத்தில் ஆரியமக்கள் வேள்வித் தீ, யாகச் செயல்கள் என்பவற்றிற்குத் தலைவனாக அக்கினி பகவானை வழிபட்டதிற்கு இருக்கு வேதம் சான்று பகர்கின்றது. அக்கினித் தெய்வத்திற்கு யாகாதிகள் செய்யும் வழக்கம் நின்றகாலத்தில், தீயை மூட்டும் உற்பத்தி இடமாகிய துளைப்பலகையும் தடியும் பூசிக்கப்பட்டன. அக்கினித் தெய்வம் மதிப்பிழந்து நின்ற காலை சிவனுக்கு இப்பண்புகள் மாற்றப்பட்டு, இதுவே சிவலிங்க சின்னமாய் தோன்றிற்று என்பது ஆய்வாளர் கருத்து.

**தெய்வத் தீ:**

இறைவனும் மனிதனுடன் தொடர்பு கொள்ள வந்திருந்த வேளை தீயையே கருவியாகப் பயன்படுத்துகிறார். எபிரேய மக்களை எகிப்தின் அடிமை நிலையினின்றுமீட்க தெரிந்து கொண்ட மோசேஸ் என்பாருடன் உரையாடிய இறைவன், செஞ்சுடர் பரப்பும் செடியின் நடுவே தோன்றினார். எகிப்து நாட்டைவிட்டு வெளியேறிய பொழுது அவர்களைப் பாலைவெளியில் பாதுகாக்கவும், வழிநடத்தவும் தம் அருள்பாலிப்பை நெருப்புத் தூண்மூலமே அளித்தார். பாலை நிலத்தில் இருந்த இம்மக்களுக்குப் பரமன் பத்துச் சட்டங்களைத் தீக்கக்கி நின்ற சினாய்மலையின் சிகரத்திலேயே அளித்தார். இவ்வாறு இறைவன் எபிரேயமக்களுடன் உரையாடியபோது தீயின் வடிவிலே தம்மை வெளிப்படுத்தினார்.

**கிறீஸ்து நம் செந்தழல்:**

புதிய ஏற்பாட்டில் கிறீஸ்து வின் வருகை தீயுடன் தொடர்பற்றதாகத் தோன்றினும், அவர் சிறப்பு தீபத்துடன் இணைத்துச் சொல்லப்படுகிறது. "இவர் புறமக்களுக்கு ஒளியாவார்" என்பது இறைவாக்கு. புனித அருளப்பர் கிறீஸ்துவின் பிறப்பைக் கூற வந்தபோது "வார்த்தை உண்மையான ஒளி: ஒவ்வொருவனையும் ஒளிர்விக்கும் அவ்வொளி உலகிற்கு வந்துகொண்டிருந்தது" என்று மெய்யறிவைச் சுட்டிக் காட்டுகிறார். இன்னும் தமது திருமொழன்றில் "இறைவன் ஒளியாய் இருக்கிறார்" என்று தெளிவாகக் கூறுகிறார். மரணத்திரையைக்கிழித்து வெற்றி வீராய் உயிர்த்தெழுந்த கிறீஸ்துவைக் காரிருளை ஓட்டி சுடரொளி பரப்பும் எழு ஞாயிறுவாகத் திருச்சபை போற்றுகின்றது. பாஸ்காத் திருவிழிப்பின் போது "இறைவா மூலைக்கல்லாகிய உம்முடைய திருச்சுதன வழியாக பேரொளியின் நெருப்பை விசுவாசிகளுக்கு அளித்தீரே" எனப் புதுநெருப்பை மந்திரிக்கிறது. இறைமகன் யேசு தம் மீட்புப்பணியை நிறைவாக்க தூயாவியை தம்மவர்மீது பொழிந்திட்ட போது தீ நாக்கு வடிவாகவே அளித்திடத் திருவுளமானார்.

**தூயஆவி நம் நாத்தழல்:**

இறைமாட்சி மார்தர்க்குக் காட்சியாவதற்கு தீ வடிவம் பொருத்தமானது. எனெனில் தீ கையினால பற்றப்படும் பருப்பொருளன்று. ஆனால் மனித புலன்களால கண்டு உணரக் கூடிய பொருள். இறைவன் இயல்பிலே ஒளியுடையனாய், உயிர்களின் அகவிருளாகிய அறியாமையை நீக்கி அறிவொளியைத் தோற்றுவித்தல் போல், தீக்கொழுந்தும் கண்ணை மறைக்கும் புறவிருளை யோட்டி எல்லாவற்றையும் விளங்கச் செய்கிறது. இறைவன் தாம் தூயனாய் நின்று தூயவல்லாப் பொருட்களோடு கூடியபொழுதும், அவற்றின் தூய்மையின்மையை நீக்கி தூய்மை செய்தல் போல தீயும தான் தூயதாய் நின்று தூய்மையற்றவற்றை எரித்து தூயசாமபராக்குகின்றது. இவ்விதம் அருவும் உருவும் ஒளியும் ஒருங்குடைய இறைவனது அருளுருவதிருமேனி விளக்கத்திற்கு தீயே சாலப் பொருந்தும். கிறீஸ்துவின் தூயஆவி தீவடிவில் வந்தெமை ஆட்கொண்டது எத்துணை சிறப்புடையது.

"எமக்கு வெளிப்படா என்ன
வியன் தழல் வெளிப்பட்ட
எந்தாய்"

எம்மீது எழுந்து அக இருளை அகற்றி, அறிவொளியை ஏற்றி புண்மை களைந்து புனிதம புகுத்திப் புதுமைப் பொழிவு தருக.

# பாப்பரசரின் புதிய அமைச்சர்கள் இருவர்

(சாமுவேல் பெனடிக்ற்)

பாப்பு தந்தை அண்மையில் தமது மந்திரி சபையில் சில மாற்றங்களைச் செய்துள்ளார். பாப்பரசரின் அமைச்சர்களுள் பிரதான இடத்தை வகிப்பவர் இராஜாங்க அமைச்சர்தான். இவரை வத்திக்கானின் பிரதம மந்திரியென்றும், பாப்பினறக் கடுத்தபடியாக சத்திய திருச்சபையில் பதவிவகிப்பவரென்றும் கூறலாம்.

**பிரான்சியர்:**

கடந்த 55வருடங்களாக வத்திக்கானின் இராஜாங்க அமைச்சராக இத்தாலியர்களே பதவியிலிருந்தனர். சின்னப்ப தந்தை இவ்விடயத்தில் மாறுதலொன்றைப் புகுத்தியிருப்பதைப் புதுமை விரும்பிகள் வெகுவாக வரவேற்கின்றனர். கர்தினால் ஜீன் வில்லா ஆண்டகை பிரான்சியர். 64வயதினர். பிரான்சின் பிரசித்திபெற்ற கத்தோலிக்க கல்விநிலையங்களில் பயிற்றப்பட்ட ஆண்டகை. 1930இல் குருத்துவ அபிஷேகம் பெற்றார்.

**கலைப்பண்டிதர்:**

நான்கு வருடங்கள் வத்திக்கான் நூல்நிலையத்தில் விசேட ஆராய்ச்சிசெய்து கலைமாணிப் பட்டமும், திருச்சபைச் சட்டங்களில் கலாநிதிப் பட்டமும் பெற்றவர். ஆசிரியராகவும் பின்னர் இளைஞர் வழிகாட்டியாகவும் அருந்தொண்டாற்றினார். இக்காலத்தில் கத்தோலிக்க இளைஞர்களின் ஆதர்ஸ தலைவனாக இவர் விளங்கினார்.

**நிர்வாகத் திறமை:**

இளமையிலேயே சுடர்விடத் தொடங்கிய இக்குருவைப் பிரான்சிய திருச்சபை உற்றுநோக்கியது. பிரான்சிய ஆட்சிபீடத்துக்கும், கத்தோலிக்க திருச்சபைக்குமிடையே சுமுகமானநிலை உருவாகவும், பிரான்சிய திருச்சபையில் ஒற்றுமையையும், சீர்திருத்தங்களையும் புகுத்தவும்என பிரான்சிய தேசிய மேற்றிராணிமார் சங்கமொன்று இயங்கத் தொடங்கியது. இச்சங்கத்தின் பொதுச் செயலாளராக ஆண்டகை பத்துவருடங்கள் கடமையாற்றினார். பதவிவகித்த 1956 — 1960காலம் பிரான்சிய திருச்சபையின் வரலாற்றில் நெருக்கடிகள் நிரம்பியிருந்த காலம் மலைபோல எழுந்த பிரச்சனைகளையெல்லாம் திறமையாகச் சமாளித்துச் சிறப்புப்பெற்றார் ஆண்டகை.

**மேற்றிராணித்துவ திருமுழுக்கு**

1960 இல் லீயன்ஸ் அதிமேற்றிராசனத்தின் துணை ஆயராகத் திருமுழுக்குப் பெற்றவர் அம்மேற்றாசனத்தில் ஏழைகளின் புனருத்தாரண வாழ்வுக்காகவும், தொழிலாளிகளின் நலன்களுக்காகவும் அயராதுழைத்தார். தொழிலாற்றும் குருத்தொண்டர்களின் இயக்கத்தில் மிகுந்தஉற்சாகங் காட்டினார். லீயன்ஸ் அதிமேற்றிராணியாராக இவர் நியமிக்கப்பட்ட சிலதினங்கட்குள் 1965இல் கர்தினால் மாரின் செஞ்சீராவையும் பெற்றார்.

**வத்திக்கான் இராச்சியத்தில்:**

1967இல் திருச்சபையின் உயர்பீடம கர்தினாலாண்டகையை வத்திக்கானுக்கு அழைத்தது. குருக்கள் நலன் கருதும்இலாகாவில் உயர்அதிகாரியாக நியமனம் பெற்ற இவர் இருவருடங்களின் பின்னல் கர்தினாலொருவர் பெறக்கூடிய மிக உந்நத ஸ்தானத்திற்கே உயர்ந்துவிட்டார். இவரது பதவிநியமனத்தின்போது பாப்பரசர் சின்னப்பர் **திருச்சபையின் திறமையாளர்களிலொருவரும் நேர்மை மிக்கவரும்** என இவரைப் புகழ்ந்துரைத்தார்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின்போது பழமைவாதிகட்கும், முன்னேற்றவாதிகட்குமிடையே சமரசம்நிலவச்செய்வதில் அக்கறைபெடுத்துக் கொண்ட இராஜாங்க அமைச்சரவர்கள் நெருக்கடி நிரம்பியுள்ள இத்தருணத்தில் தந்தை சின்னப்பரின் நிர்வாகச் சுமைகளை இலகுவாக்குவதில் சிறப்பாகத் தொண்டாற்ற திவ்விய இஸ்பிரீத்து அருள்பாலிப்பாராக.

**அமெரிக்கர்:**

பாப்பரசரின் மந்திரிசபையில் அண்மையில் இடம்பெற்ற மற்றொருவர் அமெரிக்கர். குருக்கள நலவுரிமை இலாகாவின் அமைச்சராகப் பதவியேற்றுள்ளார். 59வயதுடைய யோண யோசவ் றைற் ஆண்டகை அண்மையிலே கர்தினால் மாருக்குரிய செஞ்சீராவைப் பெற்றவராவர்.

**குணதிசயங்கள்:**

றைற் ஆண்டகை தணிவுமிக்கவர். தவறுகளைப் பகிரங்கமாகக் கண்டிக்கத் தயங்காதவர். சத்திய திருச்சபைக்குப் பிரமாணிக்கத்துடன் தொண்டாற்றுபவர் வியட்நாம் யுத்தக் கொள்கையைப் பகிரங்கமாக எதிர்த்தார். கருப்பர்கட்குச் சமநீதி அளிக்கப்படுவது சம்பந்தமாகப் பலத்த பிரச்சாரம் செய்துவருபவர். தொழிலாளிகளின் உரிமைகட்காக அஞ்சாது குரல் எழுப்புபவர்.

**உழைப்பால் உயர்ந்தவர்:**

1909-ல் பொஸ்ரனில் ஆறு குழந்தைகளில் முதல்வராக வறிய பெற்றோர்களின் புதல்வராகப் பிறந்தார். உபகாரச் சம்பளங்களினால் கல்வித்தகமையைஉயர்த்தினார். இரவுவேளைகளில் பூங்காக்களில் சுத்தம் செய்வோனாகவும், பத்திரிகைக் காரியாலயமொன்றில் எடுபிடிப் பையனாகவும் தொண்டாற்றிப் பணம்சேர்த்துக் கொண்டு உயர்கல்வி பெற்றார். தர்க்கப் போட்டிகளில் வல்லுனராக விளங்கிய ஆண்டகை கல்வித் திறமைகட்காகப் பல பரிசில்களும் பெற்றுள்ளார். பின்னர் குருக்கள் பயிற்சிக் கழகமொன்றில் நுழைந்தார். இவரது திறமை காரணமாக மேலதிகாரிகள் உயர்கல்விக்காக உரோமை நகரத்துக்கு அனுப்பிவைத்தனர். கிரகோரியார் பல்கலைக்கழகம் இத்திறமையாளியை உயர்கல்விமானாக்கிப் பெருமைகண்டது. 1935-ல் குருத்துவ பதவிபெற்றார். நான்குவருடங்கள் மீண்டும் கிரகோரியார் கழகத்தில் பயிற்சிபெற்று, வேதசாஸ்திரத்திலும் திருச்சபைச் சட்டத்திலும கலாவல்லுனரானார்.

**அமெரிக்கா சென்றார்:**

பின்னர் மசூட்டசிலுள்ள பிரைட்டனில நிறுவிநிற்கும் புனித ஸ்தாபகர் குருக்கள் பயிற்சிக்கழகத்தின் பேராசிரியரானார். 1943-ல் பொஸரன் அதிமேற்றிராணியாரின் செயலாளராக நியமனம் பெற்றார். 1944-ல் மொன்சிக்னோர் தகமைபெற்றவர் 1947-ல் பொஸ்ரன்நகர துணைமேற்றிராணியாராகத் திருமுழுக்குப் பெற்றார். 1950-ல் வோர்செஸ்ரர் மேற்றிராணியாராகநியமனம்பெற்று 1957-ல் பிற்றஸ்பேர்க் அதிமேற்றிராணியாராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

**குருக்கள் இலாகா தலைவர்:**

இன்று ஐரோப்பாவில் குருக்கள் நிலையில பல சீர்திருத்தக் கொள்கைகள் புகுத்தப்படுகின்றன. இக்கொள்கைகளால் குருக்களின் புனிதமான தொண்டுகள் பாதிக்கப்படவும், பல அருவருக்கத்தக்க சம்பவங்கள் இடம்பெறவும் முடிகின்றது. நெருக்கடி மிகுந்துள்ள இந்நிலையில் குருக்கள் நலவுரிமை இலாகாவைத் திறமையுடன் நிர்வகிக்க வல்லமையுள்ள ஒருவரையே பாப்புதந்தை தேர்ந்தெடுத்துள்ளார் குருக்களின் புனித தொண்டுகட்கும் பரிசுத்த தனத்துக்கும் பங்கம் விளைவிக்காத வகையில் திருச்சபை சிதறுண்டுபோகாது குருக்கள் விடயமாக நடவடிக்கை யெடுப்பதில் தூய ஆவியானவரின் துணையும், வழிநடாத்துகையும் கர்தினால் யோண் யோசவ் றைற் ஆண்டகைக்குக் கிடைக்கும்படியாக நாமெல்லாம் வேண்டிக் கொள்வோமாக.

---

## நன்றி

புனித அந்தோனியாரின் மன்றாட்டினால் நான் கேட்ட கருமம் அனுகூலமாயிற்று. நேர்த்திப் படி பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியான்
பண்டத்தரிப்பு 53—69

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், பரி. சதாசகாயமாதா, புனிதர்களான யூதாததேயு, சூசையப்பர் இவர்களது மன்றாட்டாலும் எனது மகனுக்கு உத்தியோகம் கிடைத்ததற்கு நன்றியாக நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கிறேன்.


54—69 ஓர் அடியாள்

பிறேக்நகர புதுமைப் பாலனிடமும், பரி. திருக்குடும்பம், அர்ச். சூசையப்பர், புனித யூதாததேயு இவர்களிடமும் நான் இரந்துகேட்ட மன்றாட்டு அனுகூலமாயிற்று. நன்றியுடன் இதனைப் பிரசுரிக்கிறேன்.

சூராவத்தை— ஓர் அடியாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோன்றாத் துணையான தூய ஆவி



### அறியப்படாத இறைவன்

புனித சின்னப்பர் கிரேக்க நாட்டில் 'ஆதென்ஸ்' என்னும் நகரத்திற்குச் சென்றார். திருமறையைப் பறைசாற்றத் தொடங்கினார். அங்குள்ள மக்கள் பல தெய்வங்களை வழிபட்டுவந்தார்கள். ஒருநாள் புனிதர் அந்த நகரைச் சுற்றிப் பார்வையிட்டார். பற்பல தேவர்களுக்கெனக் கட்டி அர்ப்பணம் செய்யப்பட்டிருந்த கோவில்களையும் கண்டார். ஓர் இடத்தில் 'அறியப்படாத இறைவனுக்கு' என்று எழுதப்பட்டிருந்த பீடம் ஒன்றையும் பார்த்தார். அதைத் தன் மனதில் வைத்துக் கொண்டு அவர்களுக்குப் போதித்தார். அந்த அறியப்படாத இறைவன், தாம் வழிபடும் கிறிஸ்துவே. அவரையே அறிந்து வழிபட வேண்டும் எனப் படிப்பித்தார்.

### மறக்கப்பட்ட இறைவன்

அவர்கள் 'அறியப்படாத தேவனுக்கு' வழிபாடு செலுத்தினார்கள். ஆனால் நம் மத்தியில் அறியப்பட்ட தேவனையும் மறந்து வாழ்கின்றோம். அவரையும் அவர் தரும் அருட் கொடைகளையும் பற்றிக் கனவிலும் எண்ணுவதில்லை. அவர் நம்மைத் தேடி நமக்கு உதவி செய்ய நாமோ அதை மறந்து வாழ்கின்றோம். அவர்தான் பரிசுத்த ஆவி. மூவொரு இறைவனின் மூன்றாம் ஆள். பிதாவோடும் சுதனோடும் ஒன்றாக ஆராதிக்கப்பட்டு, மகிமைப் படுத்தப்படுகிறவர். நித்தியர் அறிவும் அன்பும் உள்ளவர். தந்தையினதும் சுதனினதும் அளவில்லா அன்பில் இருந்து புறப்படுபவரே பரிசுத்த ஆவி.

### விவிலியத்தில் ஆவி

பரிசுத்த வேதாகமத்திலே இவரைப்பற்றி 300 தடவைகளுக்குமேல் குறிப்பிடப்படுகின்றது. நற்செய்தியும், அப்போஸ்தல நடபடியும், சின்னப்பரின் நிருபங்களும் இவரைத் தெட்டத் தெளிவாக்குகின்றன. வேதாகமத்தின் ஆசிரியர் இவரே எனலாம். அதற்குச் சிறந்த விளக்கம் தருபவரும் இவரே.

### யேசுவும் ஆவியும்

யேசு இம் மண்ணுலகில் மனிதனை மீட்க மனுவுருவெடுத்தார். மனிதனாக வாழ்ந்தார். அவர் மனிதனாகப் பிறப்பதற்குத் தேவ ஆவியே காரணமாக இருந்தார். யோர்தான் நதிக் கரையிலே கிறிஸ்து தவத்தின் ஞானஸ்நானம் பெறுகின்றார். பரிசுத்த ஆவி புறாவடிவில் இறங்கி வருகின்றார். இதனால் புனித ஸ்நாபக அருளப்பர் இவர் தேவசுதன் என அறிகின்றார், (அரு. 1:33) நாற்பது நாள் தவமும், அதன்முடிவில் அலகையின் மேல் வெற்றியும் தந்தது அதே ஆவியின் வல்லமையே(லூக். 4:1-14).

இவரைப்பற்றியே கிறிஸ்து யேசுவும் தமது போதனையில் "நித்திய வாழ்வு பெற விரும்பிய நிக்கோதேமுசுக்கு நீராலும் பரிசுத்த ஆவியாலும் மறுபடியும் பிறக்க வேண்டும் என்கிறார். (அரு. 3:5) பரிசுத்த ஆவியைப் பெற்றுப் பாவங்களை மன்னிக்கச் சீடருக்குக் கட்டளையிடுகிறார். பரிசுத்த ஆவியைத் தூஷணித்தாலோ இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்பட மாட்டாது" என்றும் எச்சரிக்கை செய்துள்ளார்.

### பன்னிரு சீடரில்

யேசுவின் போதனைகளைக் கேட்டும், செயல்களைக் கண்டும் வியப்புற்றார்கள் அவரது சீடர்கள். செத்தவனை உயிர்ப்பித்த இவர், இறந்தபின் உயிர்ப்பாரா என ஐயமுற்றனர். அதனால் பயந்து, ஓடி, ஒளித்து வாழ்ந்தார்கள். 'பெந்தேக்கோஸ்' தினத்தன்று, பரிசுத்த ஆவி அவர்கள்மேல் இறங்கவருகின்றார். அவரைப் பெற்றதும் அவர்கள் அறிஞர்கள் ஆனார்கள். சுயநலப் புலிகள் பிறநலத் தொண்டர்கள் ஆனார்கள். பல மொழிகளில் பேசினார்கள், அருங் குறிகள் பல புரிந்தார்கள். மக்கள் பலரை மனந்திருப்பினார்கள். யேசுவின் நற்செய்தியை எத்திசையிலும் எடுத்து முழங்கினார்கள்.

### பரிசுத்த திருச்சபையில்

யூத மக்கள் மட்டுமல்ல, பிற மக்களும் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தார்கள். அப்போஸ்தலர்களின் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தவர் அனைவர் மேலும் பரிசுத்த ஆவி இறங்கினார். அவர்களும் ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப். நட. 10:44). இறைப்பணி புரிய புனித சின்னப்பரையும் பர்ணபாவையும் அதே ஆவியே நியமித்தார் என்றும் அப்போஸ்தல நடபடி கூறுகின்றது. திருச்சபையைக் காத்து நடத்துபவரும் இவரே கிறிஸ்துவின் மறை உடலாகிய திருச்சபைக்கு உயிர் கொடுத்து, அருளளித்து, வாழ வழி வகுப்பவரும் இவரே.

### நம் வாழ்வில்

அன்று யேசுவின் சீடர் மேல் இறங்கிச் செயலாற்றிய அதே ஆவி, ஞானஸ்நானம், உறுதிபூசுதல் மூலம் நம்மிலும் செயலாற்றுகிறார். பாவக் கறையைப் போக்கி, அருள் உயிர் ஈந்து ஆன்மாவைத் தூய்மை ஆக்குகிறார். நமது நற் செயல்களைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுக்கின்றார். இறைவனின் திருக் கோயில்கள் ஆக்குகின்றார். நீங்கள் சர்வேசுரனுடைய ஆலயமாய் இருக்கிறீர்கள் என்றும், சர்வேசுரனுடைய பரிசுத்த ஆவி உங்களுக்குள் வாசம்பண்ணுகிறார் என்றும் அறியீர்களோ?...... நீங்களே அந்த ஆலயம் என்கிறார் புனித சின்னப்பர்.

உறுதிபூசுதல் என்னும் திருவருட் சாதனத்தால் "ஞானம், புத்தி, அறிவு, விமரிசை, திடம், பக்தி, தேவபயம்" என்னும் ஏழு கொடைகளையும் ஈந்து, அவரது அருட் கனிகளால் நம் ஆன்மீக வாழ்வை வளம்படுத்துகின்றார்.

நம் வாழ்விலே நன்மை பல புரியும் பரிசுத்த ஆவிக்கு நாம் என்ன செய்கிறோம்? தேவாலயம் கட்டித் திருவிழாக் கொண்டாட வேண்டுமா? இந்த ஞாயிறு பரிசுத்த ஆவியின் திருநாள். இதை அடுத்துவரும் காலம் பரிசுத்த ஆவியின் காலம்.

இப் பரிசுத்த ஆவியே புத்துணர்ச்சியைப் புகுத்தி, திருச்சபையின் வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுக்கிறார். எடுத்துக்காட்டாக: தற்போது திருச்சபையில் ஏற்பட்டிருக்கும் மறுமலர்ச்சியும், திருவழிபாட்டில் திருத்தங்களும் விளங்குகின்றன. எனவே, நமது வாழ்விலும் இறை ஆவியின் ஏவுதலை ஏற்று, வாழ்வை மலர்ச்சி பெறச் செய்வோம்.

— அ. மருசலின்

## பெண்களுக்கு முக்காடா?

பெண்கள் ஆலயத்தினுள் முக்காடு அல்லது துப்பட்டி போடும் பழமையான வழக்கம் விரைவில் நீக்கப்படும். திருவழிபாட்டில்சிலமாற்றங்களை வெளிப்படுத்திய அறிக்கைஒன்று இதைத் தெரிவிக்கின்றது. பெண்கள் வேண்டுமாயின் முக்காடுகளைத் தொடர்ந்து, உபயோகிக்கலாம். ஆனால்அவர்கள் கட்டாயப் படுத்தப்பட மாட்டார்கள். இத்துடன் திருப்பலியிலே வாசிக்கப்படும் மூன்று வாசகங்களில் முதல் இரண்டும் பெண்களினாலும் வாசிக்கப்படலாம்.

### நன்றி

அருள்நிறை லூர்துநாயகியே! வளனே புனித சூசையே! மறந்தோரின் மகிமையே யூதாததேயுவே! பஞ்சகாய வரம்பெற்ற வண. பியோ அடிகளே! உங்கள் அனைவரதும் அருளால் யான் பலகால் இரந்துவிழைந்த விண்ணப்பம் பெரியவெள்ளி அன்றே கிடைக்கப் பெற்றேன். உங்கள் பேரும், புகழும் ஜெகமெங்கும் சுடர்விடுவதாக. பெரியவெள்ளி என்வாழ்வின் விடிவெள்ளி.

நுவரெலியா ஓர் அடியாள்
56-69 பெ. தா.

சென்றவாரக்காவலனில் திரு. சவரிமுத்து டானியேலின் 8-வது வருட மரணஞாபகம் என்பதற்குப் பதிலாக திரு. சவரிமுத்துவின் 8-வது வருட மரணஞாபகம் என தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டது குறித்து வருந்துகிறோம்.

**2-ம் வத்திக்கான்**

## திருச்சபையில் பரிசுத்த ஆவி

ஆண்டவராகிய கிறிஸ்து
பரிசுத்த ஆவியை அனுப்புவதாக
அப்போஸ்தலர்களுக்கு வாக்களித்தார்!
அவ்வாறே ஐம்பதாம் நாளில்
விண்ணிலிருந்து அவரை அனுப்பினார்"
[திருச்சபை 24]
"ஆண்டவரும் ஆவி அவர்களோடு
என்றும் இருப்பார்" (கிறிஸ்தவ ஒன்றிப்பு, 2).
"ஐம்பதாம் (பெந்தெக்கோஸ்ட்) நாளில்
பரிசுத்த ஆவி சீடர்களோடு என்றும்
நிலைத்திருக்க அவர்கள்மேல் இறங்கிவந்தார் .. ...
கன்னிமரியின்மேல்
பரிசுத்தஆவியின் வருகையால்
கிறிஸ்து கருவானதுபோலும்
செபித்துக் கொண்டிருந்த கிறிஸ்துவின் மேல்
அதே பரிசுத்தஆவி இறங்கி வந்ததால்
தம் பணியைத் தொடங்க
அவர் தூண்டப்பெற்றது போலும்
ஐம்பதாம் நாளில்
அப்போஸ்தலர்களின் நடவடிக்கைகள்
தொடங்கின" (திருச்சபையின் மறைபரப்புப் பணி, 4)
"ஆவியானவர்
திருச்சபையையும் விசுவாசிகளின் இதயங்களையும்
கோயிலாகக் கொண்டு குடியிருக்கிறார்;
அவர்களிடத்திலிருந்த வண்ணம்
அவரே மன்றாடுகிறார்.
அவர்கள் சுவிகாரப் பிள்ளைகள்
என்பதற்குச் சான்று பகர்கின்றார்.
நிறை உண்மையை நோக்கித்
திருச்சபையை வழிநடத்துகிறார்.
ஒன்றிப்பாலும், பணியாலும்
அதில் ஒற்றுமை விளைவிக்கிறார்—
நற்செய்தியின் வல்லமையால்
திருச்சபைக்கு இளமை அளிக்கிறார்.
என்றும் அதற்கு மறுமலர்ச்சி தருகிறார்.
அதன் மணமகனான கிறிஸ்துவுடன்
முழுமையாய் ஒன்றிக்கத்
திருச்சபையை வழிநடத்திச் செல்கிறார்.
ஏனெனில் ஆவியானவரும் மணமகளும் (திருச்சபை)
ஆண்டவராகிய யேசுவை 'வருக'என்று
அழைக்கின்றனர்" (திருச்சபை 4).

✠

"எனக்கு அறிமுகமானவர்கள், என்னை அன்போடு நேசித்தவர்கள் அனைவரதும் செபங்கள் இத்தருணம் எனக்குத் தேவை"

— புனித எப்ரேம்

## நினைவு கூருவோம்

**திரு. பி. சி. பொன்னையா அவர்கள் அமரத்துவமான முதல்வருட ஞாபகம்**

தோற்றம்: 13-5-1893 மறைவு: 29-5-1968

இரக்கமுள்ள யேசுவே! மரித்த உமது அடியானாகிய பொன்னையாவிற்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக எதிர்வரும் ஆனி 2ஆம்தேதி திங்கட்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ்- ஆசனக்கோவிலில் ஒரு துக்கப் பாடற்பூசை நிறைவேற்றப்படும். இதனைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகள், சங். கன்னியாஸ்திரிமார், மரியாயின் சேனையார், அன்பர்கள் சுற்றத்தவர்கள் அனைவரும் அன்னாரது ஆன்ம சாந்திக்காக வேண்டிக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

இவரின் பிரிவால் துயருறும்: மக்கள்—மருகர்—பேரர்
140, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

* * *

**திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை அவர்களின் 4 ம்வருட மரண ஞாபகம் — 25-5-69**

இன்றுடன் நாலாண்டு பறந்ததைய்யா
பரதவிக்க விட்டெமை நீ மறைந்த பின்னே
இத்தரையில் ஒருகணமும் மறந்ததில்லை
எழிலான உன்வதனம் நினைந்ததல்லால்
உத்தமன் உந்தனன்பை நினைக்கையிலே
உள்ளமெல்லாம் துடிதுடித்தே வெதும்புகின்றோம்
கர்த்தன்பதம் நாடிவிட்ட கருணைஐயா
கண்ணீரைத் துடைக்கும் வழிகாணச் செய்வாய்.

அன்னாரின் ஆன்மசாந்திக்காக 26-5-69 திங்கட்கிழமை காலை 6மணிக்கு ஊர்காவற்றுறை, பரிசுத்த தேவமாதா ஆலயத்தில் ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் அன்பர்கள் அன்னாரின் ஆன்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்படி நன்றியுடன் வேண்டுகின்றோம்.

இவர் பிரிவால் வருந்தும் மனைவி:
அந்தோனியாப்பிள்ளையும், சேயர்களும்.

உதயவீதி,
ஊர்காவற்றுறை. 52-69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

வைகாசி — 1969

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25 | ஞாயிறு | பரிசுத்த ஆவி திருவிழா | | | [சி] |
| 26 | திங்கள் | பரி. ஆவிவிழா எண் கிழமை | | திங். | [சி] |
| 27 | செவ்வாய் | ,, | ,, | செவ். | [சி] |
| 28 | புதன் | ,, | ,, | புதன் | [சி] |
| 29 | வியாழன் | ,, | ,, | வியா. | [சி] |
| 30 | வெள்ளி | ,, | ,, | வெ. | [சி] |
| 31 | சனி | ,, | ,, | சனி | [சி] |

# காவலன் கருத்து

## தூய ஆவியின் பிரசன்னம்


தேவனின் தூய அன்பினது உருவே பரிசுத்தஆவி. அவரை பிதாவுக்கும் சுதனுக்கும் இடையில் உள்ள பரஸ்பர அன்பின் திருவுருஎனப் பலர் வர்ணித்துள்ளனர். விண்ணுலகின் இந்த அன்பானது பூவுலகிற்கு வந்ததாக வேதாகமத்தில் பலதடவை குறிப்பிடப்பட்டுள்ளது. மரியாய் தேவனின் தாயாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது இப்பரலோக அன்பு பூலோகத்திற்கு இறங்கிவந்தது. அதேசமயத்தில் மரியாயின் மானிட அன்பு விண்நோக்கி எழுந்தது. இந்த இரு அன்புகளின் ஐக்கியத்திலேயே கிறிஸ்து உற்பவித்தார். கிறிஸ்துவின் பிறப்பிலும், வாழ்விலும், மரணத்திலும் அவரை உருவாக்கி வழிநடத்திய தேவனின் ஆவி அந்த ஒப்பற்ற உருவின் பிரதிகளாகக் கிறிஸ்தவர்களை உருவாக்கிக் கொண்டேயிருக்கின்றார்.

பிதாவையும் சுதனையும் ஆட்களாக ரூபிகரித்துக் கொள்ளும் மக்களுக்கு தூயஆவியை அவ்வாறு ஓர் ஆளாக நினைப்பது கஷ்டமாகத் தோன்றுகிறது. அவரது தனித்தன்மைகளும், சிறப்பானவேலைகளும் மறக்கப்பட்டு விடுகின்றன. அவர் புறாவாகவும், காற்றாகவும், நெருப்பாகவும் தோன்றியது இதற்கொரு காரணமாயிருக்கலாம். ஆனால் அவரை இவ்வுருவங்களில் நேரிற்கண்ட அப்போஸ்தலரோ அவரைத் தமக்கு மிகச்சமீபத்திலுள்ள ஓர் ஆளாகக் கருதிவந்ததை அப்போஸ்தலர்நடபடியில் காண்கிறோம். மிகச்சாதாரணமான மனிதர் சிலரை வீரர்களாக மாற்றியகணம் தொட்டு, ஒவ்வோர் அத்தியாயத்திலும் அவரது பிரசன்னம் சூழ்ந்துள்ளது. அப்போஸ்தலரும் சீடரும் பலகாரியங்களைச் செய்தனரெனினும் அவர்களெல்லாம் அவரது கருவிகளே. அவரே அவர்களை இயக்குபவர். குருசங்கத்தின் முன்போ, தேசாதிபதியின் முன்னிலையிலோ பேசவேண்டிய வார்த்தைகளைத் தெரிந்து கொடுத்தவர் அவர். அவர்களைக் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக்கியவர் அவர். துணிவையும் அறிவையும் கொடுத்தவர் அவர். அப்போஸ்தலரை அவரவர் செய்யவேண்டிய வேலைக்குத் தெரிந்துகொண்டவரும், அவர்கள் போகவேண்டிய இடங்களைக் குறித்தவரும், திருச்சபையின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தீர்மானங்களை எடுக்கச்செய்தவரும் அவரே.

அன்று தூயஆவியானவர் திருச்சபைக்குச் செய்தவை அத்தனையும் இன்றும் செய்துவருகின்றார். மரியாய்மீதும் அப்போஸ்தலர்மீதும் பொழியப்பட்ட தேவஅருள் இன்றும் திருச்சபைமீது பொழியப்பட்டு வருகிறது. ஆனால் மாதாவிடம் அந்த அருள் கனிகொடுத்ததுபோல் எம்மட்டில் கனிகொடாதது எதனால்? அவரது பிரசன்னத்தை நாம் உணராது, அறிந்தும் அறியாதவராய் வாழ்வதே முக்கியமான காரணமெனலாம். மரியாயையும் புனிதரையும் ஆட்களாகக்கொண்டு பக்தியும் வணக்கமும் செய்பவர், தூயஆவி மனிதஆட்கள் யாவரையும்விட மேலான தேவஆள்என்பதை உணர்ந்து அவருக்குரிய வணக்கத்தைச் செலுத்தத் தவறிவிடுகின்றனர். எம்மில் அவர் வாழ்ந்து செயல்பட்டு வருவதை நாம் உணர்வது மட்டுமின்றி, பிறரும் அதை உணரும்விதமாக எமதுவாழ்வு அமையவேண்டும்.

"மாம்சத்தின்படி வாழ்ந்தீர்களானால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் இச்சைகளை ஒடுக்கி நடந்தால் பிழைப்பீர்கள்."

— உரோமர் 8: 13



## சம்பேதுரு சதுக்கத்தில் சப்திக்கும் ஒலிகள்

# திருச்சபையின் அமைப்பை அலட்சியம் செய்யாதீர்!

—பரி. தந்தை

### திருச்சபையின் தொடர்பான மறுமலர்ச்சி

கிறிஸ்துவின் திருச்சபை மட்டிலே நாம் கூடின அறிவும், அன்பும் கொள்ளவேண்டுமென்று திருச்சங்கம் எங்களை வரவேற்கிறது. ஆனால் இப்போ என்ன நடக்கிறது? திருச்சபையின் மனுஷீக தோற்றம் அதனகத்தேயுள்ள குறைகளினாலும், பிழைகளினாலும், பாவிகளினாலும் "உருக் குலைக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. திருச்சபை பரிசுத்தமானதோர் தெய்வீக ஸ்தாபனம். ஆனால் அது பெலவீனம் நிறைந்த மனிதர்களை அங்கத்தவர்களாகக் கொண்டிருக்கிறது. நேரத்திலும் தூரத்திலும் உருளும் உலகிலே இடம்பெறும் மாற்றங்கள் திருச்சபையிலும் மாற்றத்தைக் கோருகின்றன. காலத்தின் குறிகளை அறிந்து திருச்சபையை மாற்றி அமைத்து அதற்குரிய சதா இளமை எழிலுடன் தோற்றுவிக்க திருச்சங்கம் பல இயக்கங்களை ஆரம்பித்துவைத்தது. ஆனால் நல்ல மறுமலர்ச்சி இயக்கங்களின் பேரில் திருச்சபைக்குள்ளே அனேக கிளர்ச்சிகளையும், பொய்யான மாற்றங்களையும் காண்கின்றோம், நாம் நீதியான நேர்மையான மறுமலர்ச்சியை முழுமனதுடன் வரவேற்கின்றோம். ஏனென்றால் மனுஷீகத்தின் பெலவீனத்தால் திருச்சபையில் உருவாகும் பிழைகளை காலத்திற்கு ஏற்ற விதமாக திருத்தி அமைப்பது எமது திருக்கடன். இதைத்தான் திருச்சபை எப்பொழுதும் மறுமலர்ச்சியில் இருக்கவேண்டிய ஸ்தாபனம் என்று சங்கம் விளக்குகின்றது (Ecclesia semper reformanda est) ஆனால் மறுமலர்ச்சியின்பேரில் பொறுப்பற்றவர்களினால் உந்தப்படும் புரட்சிகளை எதிர்க்கின்றோம்.

### ஆழமற்ற குறைகள்:

அடிக்கடி பொறுப்புணர்ச்சியற்றதும், மக்களின் உணர்ச்சியிலே கிளர்ச்சி பிறப்பிக்க வல்லதுமான அபிப்பிராயங்களை சிலர் திருச்சபையின்மேல் அள்ளி வீசுகின்றனர். திருச்சபை ஏதோ பூரணமாக மனுஷீக ஸ்தாபனம் என்றாற்போல் அதன் அமைப்பை அலட்சியம்செய்வதிலும் தாங்களே அதன் நீதியஸ்தர் என்றாற்போலும் நடந்துகொள்ளுவதிலும் பெருமை பாராட்டுகின்றனர். இப்படிக் கிளர்ச்சியான அபிப்பிராயங்களைக் கொண்டுள்ள பலர் திருச்சபைக்கு வெளியே தம்மை ஒன்று சேர்க்கின்றனர்.

### ஸ்தாபனத் திருச்சபை முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை

(Institutional Church Obstacle to Progress)

திருச்சபை ஒருங்குபடுத்தப்பட்ட ஸ்தாபனமாகவும் (Institutional Church) ஒழுங்கற்ற ஆன்மீகச் சபையாகவும் (Free and spiritual Church) கருதுகின்றனர். இரண்டாவது சபையைச் சார்ந்தவர்கள் திருச்சபையில் உள்ள குறைபாடுகள் எல்லாவற்றிற்கும் ஒழுங்குபடுத்தப்பட்ட திருச்சபையின் அமைப்பையே (Structures) காரணமாகக் கருதுவர். "திருச்சபையின் ஸ்தாபன அமைப்பே (Institutional structure) முன்னேற்றங்களுக்குத் தடை; மக்களின் சமயப்பற்றுக்குத் தடை; ஆகையினால் இவ் வமைப்புகளிலிருந்து எப்பொழுது எம்மை விடுவிக்கிறோமோ, அப்பொழுதுதான் உண்மையான இளமை நிறைந்த (Young and authentic Christianity) திருச்சபையை உருவாக்கலாம்" என்கின்றனர். இதைப்பற்றி நாம் என்ன அபிப்பிராயம் கொள்ளவேண்டும்?

### இருவித அமைப்புகள்:

அமைப்புகள் இருவிதம் ஒன்று ஸ்தாபனத்தின் தன்மையில் தங்கியுள்ளது, மற்றது பாரம்பரியத்தில் தோன்றியது. ஸ்தாபனத்தின் தன்மையில் தங்கியுள்ள அமைப்பு திருச்சபையின் உண்மை உருவத்திற்கும் நிரந்தர சீவியத்திற்கும் இன்றியமையாதது. அந்த அமைப்பு சபையின் ஸ்தாபகரால் கொடுக்கப்பட்ட அமைப்பு. இதை மாற்ற முடியாது. ஆனால் பாரம்பரியத்தில் சரித்திர சூழ்நிலைகளிலிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட அமைப்பும் இருக்கின்றது. அதை எப்பொழுதும் மாற்றி அமைக்க வேண்டும்.

### யார் மாற்றி அமைப்பது?

திருச்சபையில் காலத்திற்கேற்ற மாற்றங்களை உருவாக்க யாருக்கு அதிகாரமுண்டு? தனிப்பட்ட முறையிலே பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டவர்கள் என்போருக்கல்ல. ஆனால் முழுத் திருச்சபையையும் கண்காணித்து வரும் அகிலஆயர்குழுவிற்கே இவர்கள்தான் சங்க ஏடுகளின் வழியாக மாற்றத்தின் திட்டங்களை வெளிப்படுத்தியிருக்கின்றனர். இத் திட்டங்களைக் கவனத்துடனும், பிரமாணிக்கத்துடனும் அமுல் செய்வதில் ஆயர்களுடன் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். தற்பொழுது திருச்சபையில் காணப்படும் அமைப்புகள் எல்லாவற்றையும் முட்டுக்கட்டையாகக் கருதி, அவற்றை அழித்தொழித்துவிடாது மாற்றங்களை வேண்டி நிற்கும் அம்சங்களை மாத்திரம் மாற்றி அமைப்பது உண்மையான மறுமலர்ச்சியாகும். (Authentic Renewal)

## பிரதமர் மக்நீலின் ராஜினமா ஏன்?

வட-அயர்லாந்து பிரதேசமாகிய அல்ஸ்ரர் மாகாணத்தில் ஆளும் கட்சியின் தலைவராக திரு. மக்நீல் சென்ற 6 வருட காலமாகப் பதவி வகித்துவந்தார். இந்தக் காலத்திலே ஆளும் கட்சியாகிய "யூனியன்லைற்" கட்சிக்குத் தன் பிழையான போக்கைவிட்டு உண்மையான ஜனநாயக முறையில் வாக்குரிமை ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படவேண்டுமென்றும், வேலை வாய்ப்பு, புது வீடுகள் பெறுதல் முதலியனவற்றில் கத்தோலிக்கருக்கும் புரொட்டஸ்தாந்தருக்கும் பாரபட்சமின்றி அரசாங்கம் நடந்துகொள்ள வேண்டுமென்றும் புத்தி புகட்டிவந்தார். ஆனால் தடித்த மண்டையோடு கொண்டவராகிய அவர் கட்சியினர் அவர் போக்கை விரும்பவில்லை: ஆகவே யோக்கியமாக இப்பெரியார் தம் பதவியை ராஜினமாச் செய்துவிட்டார்.

## வடஅயர்லாந்தின் புதிய பிரதமர்

வடஅயர்லாந்தின் பிரிவாகிய அல்ஸ்ரர் மாகாணத்தில் கத்தோலிக்கருக்கும், பிறருக்கும் ஏற்பட்ட பல கலகங்களின் விளைவாக முன்னாள் பிரதமர் ஓநீல் என்பர் தம் பதவியைத் துறந்ததை நேயர் அறிவர். இவரின் இடமாகத் திரு. ஜேம்ஸ் கிளார்க் என்பவர் பிரதம மந்திரி பதவியை ஏற்றிருக்கிறார். கத்தோலிக்கருக்கும், பிறருக்குமிடையில் விசேஷமாய்ச் சென்ற 6 மாதகாலமாக நிலவிவரும் கலகங்களைத் தவிர்ப்பதும் அவற்றின் காரணங்களைக் களைவதுமே தமது முக்கிய கடமை என அவர் பதவி ஏற்கும் சமயம் கூறியுள்ளார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. [illegible] அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1969 ஆம் ஆ வைகாசி மீ 24ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300. தாபிதம்: 1879

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org